ISSN 1391-9504

PUBLIC LIBRARY
JAFFNA.

# Vijey விஜய் විජය්

03.11.2010 - மலர் 07, இதழ் 35




PUBLIC LIBRARY
JAFFNA.

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொடூரமான ஆள்பதி

ஒல்லாந்தர் தம் பிரதேசத்தில் இருந்து காடு, மேடு உள்ளிட்ட அனைத்து இடங்களினதும் மற்றும் இடத்தின் பரப்பு, அதிலுள்ள கட்டட விபரங்கள், அறவிட வேண்டிய வரிகள் போன்ற பல்வேறு விபரங்களை இந்த தோம்புகளில் (ஆவணங்களில்) பதிவு செய்தனர். மற்றைய தோம்பில் ஒவ்வொரு ஊரிலும் வாழும் மக்களின் பெயர்களும் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய சேவை விபரங்களும் வயதும் அவர்கள் கொடுக்க வேண்டிய வரித்தொகையும் குறிப்பிடப்பட்டன. குறிப்பிட்ட காலத்திற்குள் தோம்புகள் புதுப்பிக்கப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட பல தோம்புகள் கொழும்பு அரச ஆவணக்காப்பகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், அவர்கள் பாடசாலைகளுக்கும் தோம்புகளை உருவாக்கினர். அங்கு பாடசாலை நிர்வாக சபையினரின்கீழ் கிராமங்களில் அவர்கள் திருமுழுக்கு (கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கும்பொழுது மேற்கொள்ளும் அபிஷேக நிகழ்வு அல்லது கிறிஸ்தவர்களாக்குதல்) வழங்கியோரின் பெயர், சாதி, பிறப்பு, திருமணம், மரணம் சம்பவித்த தினம் ஆகியவற்றை காலகட்டங்களுடன் விலாவரியாக குறிப்பிட்டனர்.

எனினும், ஒல்லாந்த வர்த்தகசங்கத்தின் அதிகாரிகளும் சேவையாளர்களும் பெரும் ஊழல்களில் ஈடுபட்டனர். மக்களுக்கு பல்வேறு தொல்லைகளைக் கொடுத்ததோடு, சங்கத்தை மாற்றி தொடர்ந்தும் பல்வேறு மோசடிகளிலும் ஈடுபட்டனர். இதேவேளை, கி.பி 1726 ஆம் ஆண்டு ரம்ப் என்ற ஆள்பதி காலமானார். அவரின் இடத்துக்கு பீட்டர் வைஸ்ட் எனும் ஆள்பதி நியமிக்கப்பட்டார். அவர் மிகவும் கொடூரமான நிர்வாகி. மக்களுக்கு எதிராக மிக வைராக்கியத்துடன் செயற்பட்டார். வழக்கு விசாரணையின்றிப் பலரைக் கொலை செய்தார். பல்வேறு சித்திரவதைகளையும் மேற்கொண்டார்.

இவரின் கொடூரமான செயல்களை பத்தேவியா நிர்வாகம் கேள்விப்பட்டு பீட்டர் ஆள்பதியை கைது செய்து பத்தேவியாவுக்குக் கொண்டு சென்றது. அவர்கள் பீட்டர் ஆள்பதியை அங்கு வைத்து விசாரணை செய்தபின்னர் கொன்றனர். அதன்பின் அவருக்குப் பதிலாக ஆள்பதியாக ஸ்டீபன் வர்ஸ்லூயிஸ் என்பவர் பதவி ஏற்றார். அவர் முன்னைய ஆள்பதி செய்த தவறுகளை நீக்கி மக்களை கவரும் வகையில் நல்லாட்சியை மேற்கொள்ள முயற்சித்தார். நாட்டில் சிறந்ததொரு ஆட்சி நிலவப் பெரும் பணிபுரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு செல்லும் தாய்மார் தம் பிள்ளைகள் குறித்து 1929 இற்கு அறிவிக்கவும்

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கோரிக்கை

தொழில் நிமித்தம் தாய்மார் வெளிநாடு செல்லும்போது, அவர்கள் தங்கள் பிள்ளைகளை யாருடைய பொறுப்பின்கீழ் விட்டுச் செல்கின்றனர் என்பது குறித்து 1929 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத் தரும்படி சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வெளிநாடு செல்லும் தாய்மார்களிடம் கோரியுள்ளது.

அவ்வாறு அறியத் தரும் பட்சத்தில், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தினால் பிரதேச மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரிகளூடாக, இந்த சிறுவர்களின் பாதுகாப்புக் குறித்து ஆராயக்கூடியதாக இருக்குமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தாயொருவர் வெளிநாடு செல்வதால் பிள்ளைகள்




எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைக் குறைத்து, அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே மேற்படி வேலைத் திட்டத்தை செயற்படுத்தத் தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு இழைக்கப்படுகின்ற சித்திரவதைகள், சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் 1929 எனும் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பாடசாலை மட்ட தொகை மதிப்பீடுகள் கணினி மயப்படுத்தப்பட்டு வருகின்றன

இவ்வருடத்திற்கான பாடசாலை மட்டத்திலான தொகை மதிப்பீடுகளை சீர்செய்து, அவற்றைக் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போதளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் புள்ளிவிபரவியல் பிரிவின்




சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் அரச பாடசாலைகள், அரசின்கீழ் இயங்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர், ஆசிரியர் தொகை மற்றும் அவற்றுடனான தகவல்கள் கல்வி அமைச்சின் புள்ளிவிபரவியல் பிரிவினால் சேகரிக்கப்பட்டு, அவை கணினி மயப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கமைய, இவ்வாண்டுக்கான பாடசாலை மட்டத்திலான தொகை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போதளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 2011 ஆம்

மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள தேசிய மட்டத்திலான சனத்தொகை மதிப்பீட்டுக்கான நடவடிக்கைகள் தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய மட்டத்திலான சனத்தொகை மதிப்பீடானது 1981 ஆம் ஆண்டிலேயே இறுதியாக மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழில் 120 பாடசாலைகள் தரமுயர்த்தப்பட உள்ளன



1000 அரச பாடசாலைகளைத் தரமுயர்த்தும் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள 120 பாடசாலைகள் தரமுயர்த்தப்பட உள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தரமுயர்த்தப்படவுள்ள மேற்படி 120 பாடசாலைகளின் அதிபர்களுக்கான விளக்கக்கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணக் கல்வி வலய கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# உடனடி உணவுகளை நாடுவதால் பக்கவாதத்தால் பாதிப்படைவோர் தொகை அதிகரிப்பு



இலங்கையின் மொத்த சனத்தொகையில் 80% ஆனோர் உடனடி உணவுகளை அதிகம் நாடும் பழக்கமுடையோராக இருப்பதனால் பக்கவாதத்திற்கு ஆளாகும் ஆபத்து அதிகரித்திருப்பதாக சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

நாட்டிலுள்ள ஆண்களின் எண்ணிக்கையில் 81 சதவீதத்தினரும் பெண்களில் 83 சதவீதத்தினரும் உடனடி உணவுகளை அதிகம் நாடுபவர்களாக இருப்பதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் பாலித மஹீபால தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் சுமார் 11 சதவீத மரணங்கள் பக்கவாதத்தின் காரணமாகவே நிகழ்வதாகத் தெரியவந்துள்ளதாகவும் புகைத்தல், மது அருந்துதல், உடல் களைப்புறும்படியான வேலைகளில் ஈடுபடாமை, உடல் எடை அதிகரிப்பு போன்றன இந்நோய் ஏற்படுவதற்கு பிரதான காரணங்களாக அமைவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

**புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,**
**'விஜய்'**
**த.பெ. எண் 2037, கொழும்பு.**

என்ற முகவரிக்கு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். பிந்திக் கிடைப்பவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அனுப்பலாம். கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டா.

60 DAYS BASIC / SPOKEN ENGLISH / தபால் மூல ஆங்கில பாடநெறி
5ம் ஆண்டு புலமை பரீட்சையை முடித்த மாணவர்களுக்கு என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி
எமது இந்த BASIC / SPOKEN ENGLISH அடிப்படையும் பேச்சுப் பயிற்சி பாடநெறியானது 7 வயது தொடக்கம் 12 வயது வரையான சின்னம் சிறார்க்கு சிறந்த பாடநெறியாகும்
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும்
30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்
அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
மேலதிக விபரங்களை பெற பெயர்.முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொரகஹகந்த, களுகங்கை திட்டங்களால் நீர்வளம்

மண்வளம், மனிதவளம், நீர்வளம் மிக்க நாடாக இலங்கை கருதப்படுகின்றது. எனினும் சகல வளங்களும் குவிந்துள்ள நமது நாடு இன்னமும் வெளிநாட்டு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து கொண்டிருப்பதானது நாம் நமது வளங்களை உரிய முறையில் பயன்படுத்தவில்லை என்பதையே பறைசாற்றுகின்றது.

நம்நாட்டு மூலவளங்களில் நீர்வளம் மிக முக்கிய ஒன்றாகக் கருதப்படுகின்றது. இது உரிய முறையில் கையாளப்பட்டு பயன் படுத்தப்படுமானால் நாடு விவசாயத்துறையில் தன்னிறைவு பெறும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் 75 அங்குலத்திற்குக் குறைவான மழைவீழ்ச் சியைப் பெறுகின்ற பகுதிகள் உலர்வலயமாகக் கணிக்கப்படு கின்றன. இப்பிரதேசங்களில் வெப்பநிலை இலங்கையின் மலை நாட்டுப் பகுதிகளை விடவும் உயர்ந்தே காணப்படுகின்றது. வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் நீரைப் பெறும் இப்பகுதிகள், அதிக வெப்பம் காரணமாக, மழைநீர் விரைவில் ஆவியாகிவிடும் தன்மையைக் கொண்டிருப்பதால் அவை வறண்ட பிரதேசங்களாகக் கணிக்கப்படுகின்றன.



பண்டையகாலம் முதல் விவசாயத்திற்காக மழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய குளங்களும், கால்வாய் களும், சுண்ணாம்புக் கற்பாறை அமைப்பைக் கொண்ட கிணறுகளும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதோடு, மத்திய மலைப்பிரதேசத்திலிருந்து ஊற்றெடுக்கும் ஆறுகள் சுமந்துவரும் நீரும் பயன்படுத்தப்பட் டுள்ளது.





வரலாற்றில் அனுராதபுரம், பொலன்னறுவை யுகங்கள் நம் நாட்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்ட காலமாகக் கருதப்பட்டு வந்தது. இதற்கு அக்கால மன்னர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்ட குளங்களும், கால்வாய்களுமே முக்கிய காரணமாக அமைந்தது. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் இந்த நாட்டு மண்ணில் விழும் மழையின் ஒரு துளியையேனும் மனித பாவனைக்குப் பயன்படாமல் வீணாக கடலில் கலக்க விடமாட்டேன் என்ற கொள்கையை தன்னுள் கொண்டு செயற்பட்டமை வரலாறு எமக்கு உணர்த்தும் பாடமாகும்.

வெளிநாட்டார் வருகையின் பின்னர் நாடு, பணப்பயிர் செய்கை யில் ஈடுபடுத்தப்பட்டு, வர்த்தக நோக்கை அடிப்படையாகக் கொண்டு செயற் பட்டமையால், எமது பாரம்பரிய உற்பத்தி முறைகள் சிதைவுற்ற தோடு, அதனோடு இணைந்த வறண்ட பிரதேச நீர்வளங் களும் சிதைவுற்றன. மலைப்பிரதேசங்களில் காடுகள் அழிக்கப்பட்டு,. வர்த்தகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதன் காரணமாக, மழை வீழ்ச்சி குறைந்ததோடு, மத்திய மலைப்பிரதேசத்திலிருந்து ஊற்றெடுத்து வறண்ட பிரதேசங்களை நோக்கிச் செல்லும் ஆறுகளின் நீர் சில காலங்களில் வெள்ளமாகி, பயிர்கள் அழிவடையும் நிலையும், மலைப்பிரதேசத்தில் ஊற்றெடுக்கும் நீரின் அளவு குறைந்து, ஆறு களால் வறண்ட பிரதேசங்களுக்கு குறைந்தளவு நீரே கொண்டு செல் லப்படும் நிலையும் ஏற்படலாயின. இதனால் இப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நீர்வளப் பற்றாக்குறை ஏற்படலாயிற்று. குறிப்பாக நெல் உற்பத்திக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள இப்பிர தேசங்களுக்கு நீர்வளம் இன்றிமையாத ஒன்றாகும்.

மலைநாட்டிலிருந்து ஊற்றெடுக்கும் ஆற்றுநீர் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் பயன்பட வேண்டுமென்ற நோக்கில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் 1964 இல் ஆரம்பிக்கப் பட்டது.

அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, மாத்தளை மாவட்டங் களுக்கு நீர்வளத்தைப் பெற்றுக்கொடுப்பதற் கென்றே, மகாவலித் திட்டத்தின் அடுத்த பாரிய திட்டமாக மொரகஹகந்த களுகங்கை நீர்திருப்புத் திட்டம் உருவாகியுள்ளது. இதற்கான திட்டநகல் ஜெர்மனியின் லாஹ்மெயர் (Lahmeyer) சர்வதேச நிறுவனத்தினூடாக, இலங்கை மத்திய பொறியியல் ஆலோசனைத் தாபனம், (CECB) குவைத் யுனைடட் கொன்சல்டிங் குரூப், ஜப்பான் சோ கைஹட்சு கூட் டுத்தாபனம் (Shuo Kaihatsu Corporation) ஆகியவற்றோடு இணைந்து 2004இல் உருவாக்கப்பட் டது.

விவசாய அபிவிருத்தி, வீட்டுப்பாவனை ஆகியவற்றுக்கு நீர் வழங்கல், விவசாயத் தோடு இணைந்த கைத்தொழில் அபிவிருத்தி களை மேம்படுத்துவதற்கான நீர் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அபிவிருத்தி செய்யப்படாதிருக் கும் பிரதேசங்களில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வ தற்கான மனித வளங்களைப் பயன்படுத்த ஆவன செய்தல் மற்றும் மின்சார உற்பத்தி என்பன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின் மூலம் 3.2 கிலோ மீற்றர் நீளமான களுகங்கை மொரகஹகந்த சுரங்கவழி மூலம் நிமிடத்துக்கு 15 கனமீற்றர் நீரும், 7.2 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இரண்டாம் போவதேன்ன சுரங்க வழி மூலமாக, நிமிடத்துக்கு 25 கனமீற்றர் நீரும் வெளியேற்றப்படும் . 65.5 மீற்றர் உயரமான களுகங்கை நீர்த்தேக்கம் 265.6 மில்லியன் கனமீற்றர் நீரைக் கொள்ளக் கூடியது. நீர்வழிந்தோடும் கால்வாய்களின் நீளம் சுமார் 6. கிலோ மீற்றர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 20 மேகாவோட் நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

10 வருடங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படும் இத்திட்டத்தின் ஆக்கபூர்வமான வேலைகள் 2007 ஜனவரி 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. திட்டத்துக்கான மொத்தச் செலவினம் 557. 43 மில்லியன் (இலங்கை ரூபாவின் மதிப்பில் 63,535.871 மில்லியன்) அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- ஐ.ஏ.ஸத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்மண்ட் ஃபிரைட்டின் ஆளுமைக் கொள்கை





சிக்மன்ட் ஃபிரைட் (Sigmund Freud), தனது Psycho-Analysis கொள்கைகளை ஆரம்ப காலக் கொள்கைகள் அடிப்படையில் விளக்குகிறார். ஃபிரைட், ஆளுமையை இளையவர்கள் (1 வயது-11 வயது), வளர்ந்தவர்கள் எனப் பிரித்து விளக்குகின்றார். அது மட்டுமன்றி, இவரது கருத்துக்கள் நடைமுறையில் ஆற்றுப்படுதல் (Counseling), தியானம் (Meditation), விளையாட்டு (Sports and Games) என்றவாறாகப் பிரயோகிக்கப் படுவதையும் காணக்கூடிய தாக உள்ளது. இதிலிருந்து ஆளுமை தொடர்பான விளக்கத்தில் ஃபிரைட்டினது கருத்துக்கள் முக்கியமானது என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

உளப் பகுப்பாய்வு அணுகுமுறையைக்கொண்ட பிரைட்டின் ஆளுமை மூன்று வெவ்வேறு பாகங்களினால் இணைக்கப்பட்டுள்ளது. ID, Ego, Super Ego ஆகிய மூன்றும் ஃபிரைட்டின் ஆளுமைக் கட்டமைப்புகளாகும். ஒப்பீட்டு அடிப்படை யில் இம்மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருந்தாலும், ஒன்றுக்கொன்று முரண்படுவன எனவும் அவர் கூறுகின்றார்.

## ID என்பது....

ID என்பது உடலியல் விருப்பங்கள், பற்றுக்களை நிறைவேற்றும்படி தூண்டுவதும் நீதி நியாயங்களுக்கு கட்டுப்படாததும் மனச்சாட்சிக்கு அடங்கி நடக்காததுமான ஓர் உள நிலைப் பகுதியாகும். குழந்தைப் பருவத்திலிருந்து நிறைவேறாத பற்றுக்களையும் உடலியல் ஆசைகளையும் இந்த ID எனும் உளப் பகுதி உள்ளடக்கி இருப்பதாக ஃபிரைட் கூறுகிறார். இது, அடிப்படையில் நனவிலி மனம் சார்ந்தது. உளப் பகுப்பாய்வுக் கோட்பாட்டில் இது இன்பம் காணும் தத்துவம் (Pleasure Principle) என அழைக்கப்படுகிறது.

## Ego என்பது....

ID ஐ ஃபிரைட் Libido எனக் கருதினார். மனமுறிவை அளிக்கும் வெளியுலகச் சூழ்நிலைகளுடன் ID போராடுகிறது. வெளியுலக உண்மை நிலையுடன் தொடர்புகொண்டு இயங்கும் முறையில்தான் அகம் (Ego) என்ற உணர்வு வளர்கிறது.

அகம் (Ego) என்பது நான், எனது எனும் அபிப்பிராயங்களை அல்லது சுய மதிப்பீடுகளைக் கொண்டுள்ள பகுதியாகும். அகம் மெய்மையானதும் நுண்ணறிவானதும் புற உலகத்தோடு தொடர்புடையதுமான ஒரு கூறாகும். இது மெய்மைத் தத்துவம் (Reality Principle) எனப்படும்.

Ego வுக்கும் Super Ego வுக்கும் இயக்க சக்தியைக் கொடுப்பது ID ஆகும். ID எனும் உளப்பகுதி இருப்பதனால்தான் மற்றைய இரு நிலைகளும் தோற்றம் பெறுகின்றன. அத்தோடு, மனித ஆளுமைக்குரிய அடிப்படையும் அங்கு தோற்றம் பெறுகின்றது. அதேவேளை, ID ஆனது மிருகஉணர்வு உடையது அல்லது பாலியல் உணர்வு உடையது எனவும் ஃபிரைட் கூறுகிறார். இதனால், ID யையும் Super Ego வையும் சம நிலைப்படுத்தி வைக்கின்ற Ego, மனிதனது ஆளுமை விருத்திக்கு அடிப்படையாக இருப்பதாக அவர் மேலும் கூறுகிறார். துன்பம், தீமை விளைவித்தல் கூடாது எனும் கொள்கையை கைக்கொள்வது Super Ego வினாலாகும்.

ஆளுமை வளர்ச்சியானது உளப் பாலியல் கட்ட வளர்ச்சியினூடாகவே பெறப்படுகின்றதாக ஃபிரைட் கூறுகின்றார். மேலும், ஆளுமை வேறுபாட்டிற்கு காரணம் ஒருவரிடம் காணப்படும் ID, Ego, Super Ego ஆகியவையே எனக் குறிப்பிடும் ஃபிரைட், ஆளுமையை பேணுவது மனிதனின் கடமை என்கிறார்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப். சப்ரினா**

## கல்வி
## முகாமைத்துவம் - 27
### கற்றலுக்கான ஆலோசனைகள்








# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



கஹட்டோவிட்ட, அல்-பத்ரியா ம.வித்தியாலய மாணவன் அப்துர்ரஹ்மான், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஆதம் அலி-சித்தி றமீஸா தம்பதியரின் புதல்வராவார்.



வெலிப்பென்ன ரஹ்மானியா ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி பாத்திமா அஸ்கா, 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ஹுஸைன்-நவ்மா தம்பதியரின் புதல்வியாவார்.



பாத்திமா ஹஸ்னா, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். பூண்டுலோயா த.ம.வித்தியாலய மாணவியான இவர், ஷாஹுல் ஹமீத்-நௌசியா பேகம் தம்பதியரின் புதல்வியாவார்.



பூண்டுலோயா த.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எப்.அனீஷா, 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹஸன்-ரிஸ்னா தம்பதியரின் புதல்வியாவார்.



பாத்திமா மிஸ்தா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். திக்குவல்லை மின்ஹாத் தே.பாடசாலை மாணவியான இவர், எம்.ஜரூக்-மஸீதா தம்பதியரின் புதல்வியாவார்.



மருதமுனை அல்-மனார் ம.கல்லூரியைச் சேர்ந்த மாணவி அம்னா ஸானானிஸ், 173 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



இஜாஸ் அஹமட், 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மனார் ம.கல்லூரியில் கல்வி பயில்கின்றார்.



மருதமுனை அல்-மனார் ம.கல்லூரியில் கல்வி கற்கும் எம்.சனாஜ், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அஹாஸ் அஹமட், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,மருதமுனை அல்-மனார் ம.கல்லூரி மாணவராவார்.



*அக்குறனை, அஸ்ஹர் மத்திய கல்லூரியிலிருந்து சித்தியடைந்த மாணவர்கள் தமது அதிபர், பிரதி அதிபர் மற்றும் வகுப்பாசிரியர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம். மாணவர்களின் விபரங்கள் வருமாறு;*

*ஏ.சல்மான் (169 புள்ளிகள்), எம்.சுஹறா (168 புள்ளிகள்), எம்.ஆதிக் (165 புள்ளிகள்), எப்.ஹப்சா (164 புள்ளிகள்), எம்.சபா (162 புள்ளிகள்), எப்.ஷம்லா (160 புள்ளிகள்), எம்.அயாஷ் (158 புள்ளிகள்), எப்.ருகையா (157 புள்ளிகள்), எப்.ருகையா (156 புள்ளிகள்), எம்.ஹுமைட் (154 புள்ளிகள்), எம்.அல்தாப் (154 புள்ளிகள்), எம்.ஆதில் (152 புள்ளிகள்), எம்.இஷ்பாக் (152 புள்ளிகள்), எப்.அஸ்மா (150 புள்ளிகள்), எப்.ஆனிஷா (150 புள்ளிகள்), எச்.ஸஹ்றா (150 புள்ளிகள்), எம்.முபீஸ் (148 புள்ளிகள்), எம்.ஆகில் (147 புள்ளிகள்), எப்.ரைபா (146 புள்ளிகள்), எம்.சாஜிப் (146 புள்ளிகள்), ஆர்.ஷாதிர் ஷா (145 புள்ளிகள்), எம்.ரிப்கி (145 புள்ளிகள்), எம்.ஹசன் (145 புள்ளிகள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிந்திருக்க வே

**சட்டம் என்பது நமக்குப் புதியதல்ல. சட்டம் பற்றி அடிக்கடி பேசுகின்றோம். சட்டமானது குற்றம் புரிபவர்களைத் தண்டிப்பதற்கு மட்டுமல்ல; நமது பாதுகாப்பிற்காகவும்தான். ஆனாலும், சட்டம் பற்றி நாம் அறியாத விடயங்கள் ஏராளம் உள்ளன. சமூகத்தைப் பாதுகாக்கும் பலமான ஏற்பாடுதான் சட்டம் என்றால் அது மிகையில்லை**



## சட்டம் என்பது...

சட்டம் என்றால் என்ன என்பதற்குப் பலரும் பலவிதமான பதில்களை-விளக்கங்களைக் கூற முற்படலாம். ஒரு சமூகம் சின்னாபின்னப்பட்டு சிதைவடையாமலும் பிளவுபடாமலும் இருப்பதற்கு சில நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள் தேவைப்படுகின்றன. அவையே சட்டமாகும். அந்த விதிகளை ஏற்படுத்திக்கொள்வதும் சமூகத்தால் ஆகும். அதன்படி, சட்டம் என்பது ஒரு சமூகத்தை, குழுவை பாதுகாத்துக் கொள்வதற்கான நிபந்தனைகள் அல்லது ஒழுங்கு விதிகள் எனலாம்.

## சட்டத்தின் பண்பு

சமூகம் நிர்வகிக்கப்படுவது சட்டத்தின் மூலமாகும். சட்டத்திற்கு சமூகத்தில் உள்ள பிரஜைகள் அனைவரும் கட்டுப்பட்டவர்களாவர்.

✱ எவரும் சட்டத்தை மதிக்காமல் இருக்க அல்லது புறக்கணிக்க முடியாது.

✱ சமூகத்தில் சட்டத்தின்முன் அனைவரும் சமமானவர்கள்.ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், குறைபாடுடையவர் என்ற பாகுபாடுகள் சட்டத்தின்மூன் இல்லை.

✱ சட்டத்தில் உள்ளதன் பிரகாரம் தவறிழைத்த எவரும் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

## சட்டத்தின் பிரிவுகள்

சட்டம் முக்கியமாக இரண்டு பிரிவுகளில் உள்ளடக்கப்படும்.

✱ குற்றவியல் சட்டக்கோவை

✱ சிவில் (பொது) சட்டம்

## குற்றவியல் சட்டம்

ஒருவருக்குரிய உடைமைகளைச் சூறையாடல், திருடுதல்,மோசடி செய்தல், சேதம் விளைவித்தல் என்பன குற்றவியல் சட்டத்தோடு சம்பந்தப்பட்டவையாகும். கொலை செய்தல், தாக்கிக் காயப்படுத்தல், அச்சுறுத்துதல் வேறு குற்றச் செயல்கள், சித்திரவதை, இம்சித்தல், அவதூறு என்பனவும் குற்றவியல் சட்டக்கோவைக்குள் அடங்குபவையாகும்.

## சிவில் (பொது) சட்டம்

மனிதர்களுக்கிடையிலான தொடர்பு சம்பந்தமாக கருமமாற்றுவது சிவில் சட்டத்திற்கமையவாகும்.

சிவில் சட்டம் பல பகுதிகளாகும்

**சொத்துரிமைச் சட்டம்:**

காணி மற்றும் ஏனைய சொத்துக்களின் உரித்துடமை தொடர்பாக சொத்துரிமைச் சட்டத்தின்கீழ் கவனம் செலுத்தப்படும்.

**உடன்படிக்கைச் சட்டம்:**

பொருட்கள், சேவைகள் வாங்குதல், விற்பனை வாக்குறுதி மீறல் தொடர்பாக உடன்படிக்கைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

**குடும்பச் சட்டம்:**

திருமணம், விவாகரத்து, குழந்தை, பெற்றோர் உறவு போன்ற விடயங்கள் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் கவனம் செலுத்தப்படும்.

## இலங்கையில் சட்ட முறை

உலகில் இரண்டு விதமான சட்ட மரபுகள் உள்ளன.

**பொதுச்சட்ட சம்பிரதாயம்:**

பொதுச்சட்டம் என்பது ஆங்கிலேயச் சட்டத்தை இங்கிலாந்தில் அல்லது வேல்ஸ் காலப்பகுதியில் வளர்ச்சியடைந்ததும் கடைப்பிடிக்கப்பட்டதுமான ஒரு சட்டத் தொகுப்பாகும். இச்சட்டம் இங்கிலாந்தின் ஐக்கிய ராச்சியப் பகுதிகள், அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகின்றது.

**சிவில் சட்ட சம்பிரதாயம் (உரோமச் சட்டம்):**

உரோமச் சட்டங்களை அடிப்படையாகக்கொண்ட இச்சட்டம் ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. இவ்விரு சட்டங்களும் இரண்டாகக் கலந்த சட்ட மரபுகள் பல நாடுகளில் உள்ளன. இலங்கையில் நடைமுறையில் இருப்பது அத்தகைய கலப்புச் சட்ட சம்பிரதாயமாகும்.

## கலப்புச் சட்டத்திற்கான காரணம்

இதற்கு வரலாற்று நடப்புக்கள் காரணமாக அமைகின்றன. 1656 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அவர்கள் இங்கு நிர்வாகம் செலுத்தியபோது, உரோமச் சட்டங்களையும் கலந்து டச்சு சட்டத்தின்கீழ் இங்கு ஆட்சி செலுத்தினர். அதனால், இச்சட்டம் 'உரோம டச்சு சட்டம்' என்று அழைக்கப்பட்டது. ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த போது இச்சட்டம் அமுல்படுத்தப்பட்டாலும் இலங்கை முழுவதும் இச்சட்டம் பரவவில்லை. அக்காலப்பகுதியில் மலைநாட்டுப் பகுதிகளில் கண்டிய சட்டம் நடைமுறையில் இருந்து வந்ததால் உரோம டச்சு சட்டம் செல்வாக்குப் பெறவில்லை. அதேபோன்று, முஸ்லிம்கள் தொடர்பாக தனியார் சட்டமும் யாழ்ப்பாணப் பகுதியில் முக்குவார், தேச வழமைச் சட்டங்களும் பின்பற்றப் பட்டன.

1796ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றினர். 1815 ஆம் ஆண்டு கண்டி ராச்சியத்தைக் கைப்பற்றியதோடு, இலங்கை முழுவதையும் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தனர். இக்காலப்பகுதியில் இலங்கையில் உரோம, டச்சு சட்டங்களோடு தமிழ், முஸ்லிம், கண்டிய, சிங்கள சட்டங்களும் சம்பிரதாய மரபுகளும் நடைமுறையில் இருந்துள்ளன. இருந்தபோதும் ஆங்கிலேய ஆட்சியில் இலங்கையில் நீதி செலுத்துவதற்காக ஆங்கிலேய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால், இலங்கையின் சட்ட முறையில் கலப்புச்சட்ட மரபு ஏற்படலாயிற்று.

## அரசியல் அமைப்பில் உள்ளவை

அரசாட்சி, நிர்வாகம், சட்ட வகுப்பு, சட்டத்திற்கமைய முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தல் என்பன அரசியல் அமைப்பில் உள்ளன.

✱ அடிப்படை உரிமைகள் ஏற்பாடு
✱ மொழி
✱ அரச மதம் (பௌத்தம்) மற்றும் ஏனைய மதங்களுக்கு மதிப்பளித்தல்
✱ ஜனாதிபதி, அமைச்சரவை
✱ நாடாளுமன்றம்
✱ நீதித்துறை
✱ தேர்தல்
✱ நிதி நிர்வாகம்
✱ பொது மக்கள் பாதுகாப்பு போன்ற விடயங்கள் அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

## சட்டத்துறை

சட்டத்துறை என்பது நாடாளுமன்றத்தின் மூலமே நிறைவேற்றப்படுகின்றது.





இந்த நாடாளுமன்றத்திற்கான பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். அதன்படி, நாடாளுமன்றத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மக்கள் விருப்பப் பேரில் எடுக்கப்படும் தீர்மானங்கள் என்று பொருள்படும்.

## யாப்பு

யாப்பு என்பது நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டமாகும். ஒரு விடயம் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாவதற்கு முன்னர் அது மசோதாவாகும். மசோதாக்கள் இரண்டு வகைப்படும்.


**1. பொது மசோதா:**

இவை முழுச் சமூகத்திற்கும் உரிய அனைவருக்கும் பொதுவானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டிய சட்டம்



**2. தனிநபர் மசோதா (பிரேரணை):**

இவை குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் பொருந்தக்கூடியவையாகும். இவை குறிப்பிட்ட மனிதர்களுக்காக அல்லது உள்ளூராட்சி நிர்வாக அலகுகளுக்காக நிறைவேற்றப்பட்டவையாகும்.

## மசோதா எவ்வாறு சட்டமாகின்றது?

ஒரு மசோதா சட்டமாக நிறைவேற 7 படிமுறைகளைக் கடக்க வேண்டும்.

**1 ஆவது படிமுறை:**

மசோதா முதலில் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். மக்கள் அதனை அறிந்து கொள்வதற்காகவும் அது தொடர்பான கருத்துக்களை வெளியிடுவதற்காகவும் வர்த்தமானியில் (Gazatte) பிரசுரிக்கப்படுகின்றது. அந்த மசோதாவில் தீய விடயங்கள் அல்லது பாதிப்பை உண்டு பண்ணுபவை இருந்தால் அதனைத் திருத்த அல்லது நீக்க முடியும்.

**2 ஆவது படிமுறை முதலாம் வாசிப்பு:**

நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தினால் விரிவாக வாசிக்கப்படும். பின்னர் அமைச்சர் ஒருவரால் அல்லது பிரதி அமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**3 ஆவது படிமுறை:**

இரண்டாம் வாசிப்பு. முதல் முறையாக வாசிக்கப்பட்ட மசோதா, இரண்டாம் முறை வாசிப்பதற்காக சமர்ப்பிக்கப்படும்.

**4 ஆவது படிமுறை நிறைவேற்றுக் குழு முறை:**

மசோதாவுக்குரிய விடயம் தொடர்பாக கலந்துரையாட அதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூடும். இந்தக் குழுவில் எல்லாக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பிரதிநிதிகள் உள்ளடங்குவர். மசோதா தொடர்பாக தெரிவுக் குழு அறிவிக்கும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. மசோதா தொடர்பாக முழுமையாக ஆராயப்படும். இந்த தெரிவுக்குழுவிலான கலந்துரையாடலும் பரிசீலனையும் சட்டம் உருவாவதற்கு முன்னரான முக்கிய நடவடிக்கைகளாகும்.

**5 ஆவது படிமுறை அறிக்கைக்கான சட்டம்:**

தெரிவுக்குழுவில் பரிசீலனை செய்து கலந்துரையாடப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**6 ஆவது படிமுறை:**

மசோதாவின் கடைசி படிமுறையாகும். அறிக்கை சமர்ப்பிக்கும் சட்டத்திற்கு பிறகு மசோதா மூன்றாவது முறை வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

**7 ஆவது சட்டம் சபாநாயகரின் அத்தாட்சிப்படுத்தல்:**

ஒரு மசோதா சட்டமாக்கப்பட்ட பின் அது முறையாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதை உறுதிப் படுத்துவதற்காக சபாநாயகர் அதில் கையொப்பம் இடவேண்டும். மசோதாவின் விளக்கத்தில் அல்லது அச்சுப்பதிப்பில் பிழைகள் இருப்பின், அதனைப் சபாநாயகர் கவனம் செலுத்துவார். இன்னும் சில மசோதாக்களை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்புக்கு விடவேண்டும். சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதில் ஜனாதிபதி கையெழுத்திட வேண்டும்.

## சட்டம் நிறைவேற்றப்படும் வேறு இடங்கள்

நாட்டிற்கான சட்டத்தை உருவாக்குவதில் முக்கிய பொறுப்பு நாடாளுமன்றத்திற்குரியதாகும். ஆனால், நாட்டிற்குத் தேவையான அனைத்துச் சட்டங்களையும் நாடாளுமன்றத்தால் மட்டும் இயற்ற முடியாது. அதனால், சட்டம் தொடர்பாக இன்றும் சில முறைகள் உள்ளன.

## மாகாண சபைகள் சட்டம்

இலங்கை 9 மாகாணங்களாக் பிரிக்கப்பட்டு அவற்றை நிர்வகிக்க 9 மாகாண சபைகள் உள்ளன. ஆனாலும், அந்த மாகாண சபைகளின் அதிகாரமும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தின் கீழேயே உள்ளன. சில சில விடயங்கள் தொடர்பாக சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு உள்ளன. ஆனாலும், மாகாண சபைகளால் நிறைவேற்றப்படும் சட்டங்களை செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருக்கின்றது.

## வழக்கு தீர்மான சட்டம்

இலங்கையின் சட்டத்திற்கமைய, முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பது நீதிமன்றங்களாகும். இலங்கையின் நீதிமன்ற சட்டமைப்பில் உயர்நிலையில் இருப்பது உயர் நீதிமன்றமாகும். இதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் திகழ்கின்றது. இந்த நீதிமன்றங்களின் நீதிபதிகள் அறிவிக்கும் முடிவுக்கும் சட்ட அந்தஸ்து இருக்கின்றது. இந்த நீதிமன்றங்களுக்குக் கீழ் மேல்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றம், மஜிஸ்ரேட் நீதிமன்றம் என்பன அந்தத் தீர்ப்புக்கு ஏற்ப பின்பற்றி நடப்பதற்கு உடன்பட்டுள்ளன.

## நாட்டின் உன்னத சட்டம்

இந்நாட்டின் அதி உன்னத சட்டமாக 'அரசியல் அமைப்பு' இருந்து வருகின்றது. சாதாரண சட்டங்களைவிட, அது உயர்நிலையில் மதிக்கப்படுகின்றது. நாடு ஆட்சி செலுத்தப்படுவது இந்த அரசியல் அமைப்புச் சட்டத்திற்கமைவாகவாகும். இரண்டாவது குடியரசு யாப்புச் சட்டம் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதாகும். அரசியல் அமைப்பு என்பது நாட்டை எவ்வாறு ஆட்சி செய்வது நிர்வகிப்பது என்ற தத்துவங்களின் கூட்டமாகும்.

## சட்டத்தைப் பற்றிய அறிவின்மை மன்னிப்பதற்கு போதியதல்ல


. ஒருவன் ஒரு செயலை சட்டத்திற்கு முரணானது என்று தெரியாதநிலையில் செய்தாலும் அவருக்கு எதிராகச் செய்யப்படும் முறைப்பாட்டுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும். சட்டத் தெரியாது என்ற அடிப்படையில் நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோர முடியாது. சட்டம் பற்றி குறைந்தளவிலான அறிவாவது இருத்தல் அவசியமாகும். பாடசாலை மாணவ, மாணவியர் என்ற வகையிலும் சமூகத்தில் நிலவும் சட்டங்கள் தொடர்பாக அறிவு மற்றவர்களுக்கு பாதுகாப்பும் தமக்குரிய உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன.

## சட்டமும் மதமும்

சட்டத்திற்கும் மதத்திற்கும் இடையில் நெருக்கமான உறவு இருந்து வருகின்றது. மக்கள் சட்டத்திற்கு மதிப்பளிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். பண்டைய சமூகங்களில் சட்டம் மதமாகவும் மதம் சட்டமாகவும் இருந்துள்ளன. சட்டம் இறைவனால் ஆக்கப்பட்டது என்று கருதப்பட்டது. இந்துக்களின் மனுநீதி, கிறிஸ்தவர்களின் 10 கட்டளைகள் போன்றன இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

-ஆ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய இலச்சினை
தலைநகரின் ஒருபக்கத் தோற்றம்
சுதந்திர ஞாபகச் சின்னம்
லொசின்ஜ் ஹஃபென் துறைமுகம்

வாரம் ஒரு நாடு

# மாலி

**அரசு:** ஒரு சட்ட சபையைக் கொண்ட பல கட்சிக் குடியரசு.
**சுதந்திரம்:** பிரான்சிடமிருந்து, 1960 செப்டெம்பர் 22 ஆம் திகதி.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக் டி மாலி (Republic of Mali).
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய செப்டெம்பர் 22.
**அதிபர்** (2002): அமாடு டுமானி டுவர்.
**பிரதமர்** (2007): மொடிபோ சிடிபி.

## புவியியல்

வடமேற்கு ஆபிரிக்க நாடாகிய மாலியின் பெரும்பாலான பகுதி சஹாரா பாலைவனத்தில் அமைந்துள்ளது. முற்றிலும் நிலப்பகுதிகளால் சூழப்பட்ட இந்த நாட்டின் **கிழக்கு**-நைகர்; **தெற்கு**-புர்கினா ஃபெஸோ, ஐவரி கோஸ்ட், கினியா; **மேற்கு**-செனகல் ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. நாட்டின் வட பகுதி முழுவதும் சஹாரா பாலைவனம் பரந்துள்ளது. செனகல், நைகர் ஆறுகள் விவசாயத்துக்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றன.

**மொத்தப் பரப்பு:** 478,767 ச.மைல் (1,240,000 ச.மைல்);
**மொத்த நிலப்பரப்பு:** 471,042 ச.மைல் (1,219,999 ச.மைல்).
**தலைநகரமும் பெரிய நகரமும்:** பமாகோ.
**மக்கள் தொகை** (2010): 13,796,354.
**மொழிகள்:** பிரெஞ்ச் (அலுவலக மொழி) மற்றும் பம்பாரா 80%, பல்வேறு உள்ளூர் ஆபிரிக்க மொழிகள்.
**இனக்குழுக்கள்:** மண்டே 50% (பம்பாரா, மலிங்கே, சரகோலே), பியுல் 17%, வோல்டெய்க் 12%, டுவாரெக் 10%, சொங்கை 6%, ஏனையவை 5%.
**சமயங்கள்:** இஸ்லாம் 90%, உள்ளூர் மத நம்பிக்கைகள் 9%, கிறிஸ்தவம் 1%.
**எழுத்தறிவு** (2003): 46%.
**நாணயம்:** CFA ஃப்ரேங்.
**இணையத்தளக் குறியீடு:** .ml
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +223
**தேசிய கீதம்**
A ton appel Mali
Pour ta prosperite
Fidele a ton destin
Nous serons tous unis... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

மாலி பிரதேசம் 12 ஆம் நூற்றாண்டிலிருந்து 16 ஆம் நூற்றாண்டுவரை மாலிங்கி பேரரசின்கீழ் இருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் மாலியை தனது ஆட்சியின்கீழ் கொண்டுவந்தது. 1904 இல் பிரான்சிய காலனித்துவத்தின் ஒரு பகுதியாக இணைந்ததோடு, 1920 இல் பிரெஞ்ச் சூடான் என பெயர் இடப்பட்டது. 1946 இல் பிரெஞ்ச் யூனியனின் ஒரு பகுதியாக்கப்பட்டது. 1960 ஜூன் 20 ஆம் திகதி பிரான்சின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திர நாடானது. இச்சுதந்திரத்தை செனகல் நாட்டுடன் இணைந்தே பெற்றுக் கொண்டது. அதே வருடத்தில் செனகல் பிரிந்து தனி சுதந்திர நாடானது. சுதந்திரத்தின் பின்னர் சூடானிய குடியரசு என மாலி அழைக்கப்பட்டாலும், அதே ஆண்டு செப்டெம்பர் 22 ஆம் திகதி மாலிக் குடியரசு என பெயர் மாற்றம் பெற்றது.








பிரதமர்


ஜனாதிபதி

## கலாசாரம்

மாலி ராச்சியத்தின் தென் மேற்குப் பகுதிகள் இன்றைய மாலியில் உள்ளடக்கப்படாவிடினும், அப்பகுதி மக்களின் கலாசாரம் மாலியில் செல்வாக்குச் செலுத்துகிறது. எனினும், டுவாரெக் மற்றும் மயூரி இன மக்கள் பாலைவன கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றனர். மொத்தத்தில் பல கலாசாரங்களின் சேர்க்கையே மாலியாகும்.

## காலநிலை


வருடத்தில் நொவெம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையிலான காலப்பகுதியில் குளிர்ச்சியும் உலர்ந்த பருவமும் நிலவுகின்றது. ஜூன் முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதி மழைக்காலம் ஆகும். ஒக்டோபர் மாதத்தின் ஆரம்பத்தில் வியாபாரக் காற்று வீச ஆரம்பித்து காலநிலையில் சில மாற்றங்களைக் கொண்டுவருகின்றது. மார்ச் முதல் ஜூன் வரையிலான காலப்பகுதியில் வெப்பம் நிலவும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2000): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 45,000; செல்லிடத் தொலைபேசிகள்: 40,000. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்:** AM 1, FM 28, SW 1. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 1. **இணையத்தள வழங்குனர்கள்** (2001): 13. இணையத்தளப் பாவனையாளர்கள் (2002): 30,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2002): மொத்தம் 729 கி.மீற்றர். **பெருந் தெருக்கள்**(1999): மொத்தம் 15,100 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை-1,827 கி.மீற்றர்; செப்பனிடப்படாதவை-13,273 கி.மீற்றர்). **நீர்வழிப் போக்குவரத்து:** 1,815 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** கௌலிகோரா, லொசின்ஜ் ஹஃபென். **விமான நிலையங்கள்** (2002): 26.



பண்டியாகரா பாறைகள்

## பொருளாதாரம்


**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 4%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், மரக்கறி வகைகள், பாற்பண்ணைப் பொருட்கள், மாடுகள், ஆடுகள், செம்மறி ஆடுகள். **தொழிலாளர் தொகை** (2001): 3.93 மில்லியன் (இதில் விவசாயமும் மீன்பிடித் தொழிலும் 80%, கைத்தொழில்களும் சேவைகளும் 20%). **வேலையற்றோர்** (2004): 30%. **கைத்தொழில்கள்:** உணவு உற்பத்திப் பொருட்கள், கட்டடப் பொருட்கள்,பொஸ்பேற் மற்றும் தங்கச் சுரங்கத் தொழில். **இயற்கை வளங்கள்:** தங்கம்,பொஸ்பேற், உப்பு, சுண்ணக்கல், யுரேனியம், நீர்மின்வலு. **ஏற்றுமதிகள்** (2006): பருத்தி, தங்கம், கால்நடைகள். **இறக்குமதிகள்** (2006):பெற்றோலியம், இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், கட்டடப் பொருட்கள், உணவுப் பொருட்கள், புடவை. **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): சீனா, பாகிஸ்தான், தாய்லாந்து, இத்தாலி, ஜேர்மனி, இந்தியா, பங்களாதேஷ், பிரான்ஸ், செனகல், ஐவரி கோஸ்ட்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- அஸ்கியா கல்லறை
- பண்டியாகரா பாறைகள்
- மார்டியர்ஸ் பாலம்
- பமாகோ பெரிய பள்ளிவாசல்
- ஜெனி-ஜெனோ பள்ளிவாசல்
- சுதந்திர ஞாபகச் சின்னம்
- மாலி தேசிய நூதனசாலை.




ஜெனி-ஜெனோ பள்ளிவாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீமைகளை ஒழிக்கும் புனிதத் திருநாள் தீபாவளி



இருள் நீங்கி ஒளி மேலோங்கிடச் செய்யும் இனிய திருநாளாம் தீபாவளி. சிறியோர், பெரியோர், ஏழை, வசதி படைத்தோர் என அனைவருமே மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் வரவேற்கும் இப்பண்டிகை வருடந்தோறும் ஒக்டோபர் அல்லது நொவெம்பர் மாதங்களில் கோலாகலமாக கொண்டாடப்படுகின்றது. தீபாவளி பற்றி பல சுவாரஷ்யமான தகவல்கள் உள்ளன.

தீபாவளி என்பதன் பொருள் யாதெனில் வாழ்வில் இருள் நீங்கி ஒளி தோன்றுதல் என்பதாகும். இந்துக்களின் பிரதான பண்டிகைகளில் ஒன்றான இத்திருநாளானது மருத்துநீர் வைத்தல், கங்கா ஸ்நானம் செய்தல், புத்தாடை அணிதல், உற்றார் உறவினர் நண்பர்களுடன் பட்சணங்கள் பகிர்தல் போன்ற பல இனிய நிகழ்வுகளுடன் கழிக்கப்படுகின்றது.

இத்திருநாளில் சிறுவர்களோடு இணைந்து பெரியோரும் பட்டாசுகள் கொளுத்தி மகிழ்வதில் ஆர்வம் கொள்கின்றனர்.

பட்டாசு கொளுத்துவதற்கும் ஒரு காரணம் உண்டாம். அதாவது, இந்நாளில் பட்டாசு கொளுத்துவதன் மூலம் அசுத்த ஆவிகள் சாம்பலாக்கப்படுவதாகவும் நம்பப்படுகின்றது.

இத்தகைய இனிய இத்திருநாள் பற்றி புராணம் பலவாறான கதைகளைக் கூறுகின்றது.

அதாவது, கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனை அழித்த நாளே தீபாவளி என்று தமிழ் இந்துக்கள் கூறும் அதேவேளை, வட இந்தியர்களில் சிலர் 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்து வந்த இராமனும் சீதையும் அயோத்தியை அடைந்த மகிழ்ச்சியை நினைவு கூர்ந்தும் இராமனுக்கு பட்டாபிஷேகம் இடம்பெற்ற தினத்தை நினைவுகூர்ந்தும் தீபாவளியை கொண்டாடுகிறார்கள்.



இந்தியாவின் குஜராத்தினரோ தீபாவளியை வர்த்தகமும் வியாபாரமும் மேலோங்கிடச் செய்யும் செல்வ வள ஆண்டின் ஆரம்பநாள் என்றும் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர்.



நரகாசுரன் என்னும் அரக்கன் தன் தவத்தின் மூலம் பிரம்மனிடம் மரணமில்லாத வரம் ஒன்றைப் பெறுகின்றான். ஆனால், அவனை அழிப்பதென்றால் அது அவன் தாய் பூதேவியின் கரங்களால் மட்டுமே முடியும் என்று ஓர் ஆசிர்வாதம் பிரம்மனால் அவனுக்குக் கிடைக்கிறது. வரம் பெற்ற நரகாசுரன் தேவர்களையும் மானிடர்களையும் துன்புறுத்துகின்றான். துன்பம் தாங்காத அவர்கள் விஷ்ணு பகவானிடம் போய் முறையிடுகின்றனர்.

அவர்கள் மீது இரக்கம் கொண்ட விஷ்ணு பகவான் நரகாசுரனை அழிக்கும் பொருட்டு கிருஷ்ண பரமாத்வாக அவதாரம் எடுக்கிறார்.

நரகாசுரனுக்கு அவன் தாய் பூதேவியின் கரங்களால் மட்டுமே அழிவு என்பதனால் மஹா விஷ்ணு தன் மனைவியும் பூதேவியின் மறு அவதாரமுமான சத்தியபாமாவை போரின்போது, தேர்ச் சாரதியாக அழைத்துச் செல்கிறார். போர் உக்கிரமடைகின்றது. அப்போது நரகாசுரன் எய்த அம்பு கிருஷ்ண பரமாத்மாவின் நெஞ்சைத் துளைக்கின்றது. கிருஷ்ண பரமாத்மா உணர்வற்ற நிலைக்குச் செல்கின்றார். அடுத்த கணம் தேர்ச் சாரதியாக இருந்த சத்யபாமா கிருஷ்ணரின் நெஞ்சைத் துளைத்த அம்பை எடுத்து நரகாசுரனை நோக்கி எய்கிறார். அந்த நிமிடமே நரகாசுரன் அழிந்து விடுகிறான். இந்த நாளே தீபாவளித் திருநாள் என்று பொதுவாக தீபாவளியைக் கொண்டாடுகின்றனர்.

வங்காள தேசத்தில் தீபாவளி திருநாள் நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. அவர்கள் தீபாவளிக்கு அடுத்த நாளான அமாவாசை தினம் லக்ஷ்மி தேவிக்கு உகந்த நாள் என வழிபடுகின்றனர். தவிர, தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையும்போது லக்ஷ்மி வெளிப்பட்டு அவர்களுக்குக் காட்சியளித்ததாகவும் அந்நாள் தீபாவளிக்கு மறுநாள் இடம்பெற்றதாகவும் அந்நாளைக் கொண்டாடுவதன் மூலம் செல்வச் செழிப்பு உண்டாகும் என்னும் நம்பிக்கையுடனும் கொண்டாடுகின்றனர்.

இவ்வாறு, உலக நாடுகள் பலவற்றிலும் தீபத்திருநாள் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. புனிதமாகவும் பக்தியுடனும் கொண்டாடப்பட வேண்டிய இந்நாளன்று பலர் மது அருந்தியும் மாமிசம் உண்டும் சண்டை சச்சரவுகளில் ஈடுபட முனைவதும் கவலைக்குரிய விடயம். அதன் காரணமாக, இப்புனித திருநாளில் பல விபரீதங்கள் ஏற்படுவதுண்டு.

இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் புனிதமாகவும் நம் முன்னோர்களால் கொண்டாடப்பட்டு வந்த இத்திருநாளில் பொருந்தாத பழக்கவழக்கங்களைத் தவிர்த்து நாமும் நம் முன்னோரைப் பின்பற்றி தூய்மையுடனும் பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் தீபாவளியைக் கொண்டாடுவோமாக.

**ஹரிரங்கனி**



## பறவைகளுக்காக பட்டாசை தவிர்க்கும் கிராமம்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம்-கொல்லுகுடிபட்டி என்ற கிராம மக்கள் தீபாவளிக்கு பிள்ளைகளுக்கு பட்டாசுகளை வாங்கி கொடுப்பதில்லை. அவர்கள் தீபாவளி என்றால் பட்டாசை மறந்து, சப்தமில்லாத தீபாவளியாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். காரணம் இங்குள்ள பறவைகளை இக்கிராம மக்கள் தங்கள் குழந்தைகளைப் போல் போற்றிப் பாதுகாக்கின்றனர். இதனால், தீபாவளி, உட்பட, எந்த நிகழ்ச்சிகளுக்கும் கிராம மக்கள் பட்டாசு வெடிப்பதில்லை. பட்டாசு வெடிக்கத் தடை விதித்து, கட்டுப்பாடு போடப்பட்டுள்ளது.

இதுபற்றி அக்கிராம மக்கள் கூறுகையில், இங்கு வாழும் பறவைகளை அன்புடன் பாதுகாக்கிறோம் என்றும் சமூக விரோதிகள் பறவைகளை வேட்டையாடுவதில் இருந்து தடுக்கும் பணியிலும் நாங்கள் ஈடுபட்டுள்ளோம் என்றும் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறுகையில், "பறவைகள் அதிகம் வந்து தங்கினால் அந்த ஆண்டு மழை பெய்து, விவசாயம் செழிக்கும் என்பது உண்மை" என்று தெரிவிக்கின்றனர்.

## தீபாவளியில் சிறந்த செயல்கள்



- சில நிமிடங்களில் வெடித்தும் எரித்தும் கரைக்கும் பணத்தை ஆதரவற்றோர் இல்லங்களுக்கோ, ஏழைகளுக்கோ வழங்கி விடுங்கள். ஏழையின் சிரிப்பில் நரகாசுரன் அழிவான்.
- பலகாரங்களை இந்த முறை உங்களுக்கு அறிமுகம் இல்லாதவர்களுக்கும் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களை சிறிதும் எதிர்பார்த்திராத ஏழைகளின் குடிசைக் கதவைத் தட்டி பலகாரம் கொடுத்து மனிதத்தின் ஆழத்தை வெளிப்படுத்துங்கள்.
- குடும்பத்தினரோடு, இந்த தீபாவளிக்கு ஓர் ஆதரவற்றோர் இல்லம் சென்று அங்குள்ளவர்களைச் சந்தியுங்கள். உங்கள் நேரத்தை அவர்களுடன் செலவழியுங்கள்.
- விழா நாளில் உங்களுக்குத் தெரிந்த யாராவது முதியவர்கள் தனிமையில் இருந்தால் குடும்பத்துடன் அங்கே சென்று அவர்களுடன் அன்றைய நாளைச் செலவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: .................................................. நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

**01. சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

1. இலங்கையின் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டம். (............)
2. பச்சோந்தி சூழலுக்கு ஏற்றவாறு தனது நிறத்தை மாற்றிக்கொள்ளும். (............)
3. அசுத்தமான நீரைக் குடிப்பதனால் நெருப்புக் காய்ச்சல் உண்டாகும். (............)
4. யூரியா ஓர் இயற்கைப் பசளை ஆகும். (............)
5. 'இஞ்சி' மருந்தாகப் பயன்படும் நிலக்கீழ் தண்டாகும். (............)
6. கடுகு விரைவாக முளைக்கும் வித்தாகும். (............)

**02. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுக.**



| மண்புழு | வடிவம் | கியூலெக்ஸ் | துலா | கழுத்துப்பகுதியில் |
|---|---|---|---|---|

1. அணில் தனது பிள்ளையை ........................................... கவ்வித் தூக்கிச் செல்லும்.
2. ........................................... மண்ணை வளமாக்கித் தரும்.
3. பாத்திரத்தின் வடிவத்திற்கு ஏற்ப நீரின் ........................................ அமையும்.
4. கிணற்றிலிருந்து நீர் எடுக்க ................................ பயன்படுகிறது.
5. யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பு ........................................... ஆகும்.

**03. 'A' பகுதியில் உள்ள வரிப்படங்களுக்குப் பொருத்தமானதை 'B' பகுதியிலிருந்து தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

**'A' பகுதி** **'B' பகுதி**

***உதாரணம்:***

1.  (5) 1. ஆணியை அறைதல், பிடுங்குதல்.
2.  (....) 2. மரத்தைத் துளையிடுதல்.
3.  (....) 3. சிறு துண்டுகளாக வெட்டுவதற்கு.
4.  (....) 4. சிறிய மீன்களை குறைந்த நீரில் பிடிக்க.
5.  (....) 5. பலகையில் குழி குடைதல்.
6.  (.....) 6. சுவரை செங்குத்தாக கட்டுவதற்கு.

**04. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. கறையான், வண்டுகள் என்பனவற்றால் அரிக்கப்படாத தாவரம் எது?
   1. தேக்கு 2. பலா 3. மா 4. தென்னை
2. தண்டுகளை நடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் தாவரம் எது?
   1. தக்காளி 2. கரும்பு 3. வெண்டி 4. பாகல்
3. மூன்று இதழ்களைக்கொண்ட பூ எது?
   1. சூரியகாந்தி 2. மல்லிகை 3. கடதாசிப் பூ 4. நாகமலர்
4. பச்சை நிறமில்லாத ஒரு தாவரம் எது?
   1. காளான் 2. ஆடாதோடை 3. வாழை 4. நாயுருவி
5. மஞ்சள் நிறப் பூ எது?
   1. பிறைப்பூ 2. பூவரசம்பூ 3. அத்திப்பூ 4. கத்தரிப்பூ
6. நத்தை முட்டையின் நிறம் என்ன?
   1. இளம்பச்சை 2. நீலம் 3. மஞ்சள் 4. வெள்ளை
7. இவ்வீதி சமிக்ஞை எதை உணர்த்துகிறது?

   1. முன்னால் இடப்பக்கம் திரும்பு
   2. இடப்பக்கம் திரும்பத் தடை
   3. முன்னால் வலப்பக்கம் திரும்பு
   4. வலப்பக்கம் திரும்பத் தடை
8. உடையில் பட்ட தாரை நீக்கப் பொருத்தமான திரவம் எது?
   1. தேங்காய் எண்ணெய் 2. மண்ணெண்ணெய்
   3. வினாகிரி 4. பெற்றோல்
9. மிகவும் விரைவாக ஆவியாகக்கூடிய திரவம் எது?
   1. நீர் 2. மண்ணெண்ணெய்
   3. தேங்காய் எண்ணெய் 4. ஸ்பிரிட் தொற்றுநீக்கி
10. சுத்தமான நீரின் பண்பாக அமையாதது?
   1. மணமில்லை 2. பாரமில்லை 3. சுவை இல்லை 4. நிறமில்லை
11. பாதசாரிகள் பின்பற்ற வேண்டிய வீதி முறைகள் அல்லாதது;
   1. வீதியின் வலப்பக்கமாகச் செல்லல் 2. நடைபாதையினால் ஒதுங்கிச் செல்லல்
   3. வீதியின் இடப்பக்கமாகச் செல்லல் 4. பாதசாரி கடவையினால் பாதையைக் கடத்தல்




**05. பின்வரும் சிங்களத் தொடர்களின் தமிழ்க் கருத்தினைத் தருக.**

1. ഉகுரு(த்)துமா பந்தியே இன்னவா.
   ..........................................................................
2. மே மഉகே க(ட்)ட
   ..........................................................................
3. ஒbபே தாத்தாஉகே நம மொகக்த?
   ..........................................................................

**06. பின்வரும் தாவரங்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.**

| ரம்பை | நாயுருவி | கற்பூரவள்ளி | பிரண்டை |
|---|---|---|---|

1. ...................... 2. ...................... 3. ...................... 4. ......................

**07. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக.**


1. நீரின் மூன்று நிலைகளும் எவை?
   1. .................................... 2. ....................................
   3. ....................................
2. இயற்கைப் பசளை 2 தருக.
   1. .................................... 2. ....................................
3. தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
   ..........................................................................
4. அசுத்த நீரைக் குடிப்பதனால் ஏற்படக்கூடிய நோய்கள் 2 தருக.
   1. .................................... 2. ....................................

**08. பின்வரும் அறிவுறுத்தலை வாசித்து, அதனைப் படமாக வரைந்து காட்டுக.**

| உலர் மின்கலம் ஒன்றையும், இரண்டு வயர் துண்டுகளையும் பயன்படுத்தி ஒரு மின்குமிழை ஒளிரச் செய்க | → | |
|---|---|---|

## சுற்றாடல் - விடைகள்

**(நொவெம்பர் 3 ஆம் திகதிக்குரியது)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01. | 1. (√) | 2. (√) | 3. (√) | 4. (X) | 5. (√) | 6. (√) |
| 02. | 1. கழுத்துப் பகுதியில் | 2. மண்புழு | 3. வடிவம் | | | |
| | 4. துலா | 5. கியூலெக்ஸ் | | | | |
| 03. | 1. (5) | 2. (6) | 3. (4) | 4. (2) | 5. (1) | 6. (3) |
| 04. | 1. (1) | 2. (2) | 3. (3) | 4. (1) | 5. (2) | 6. (3) |
| | 7. (3) | 8. (2) | 9. (4) | 10. (2) | 11. (3) | |
| 05. | 1. ஆசிரியர் வகுப்பில் இருக்கிறார் | | | | | |
| | 2. இது எனது வாய் | 3. உங்கள் அப்பாவின் பெயர் என்ன? | | | | |
| 06. | 1. கற்பூரவள்ளி | 2. ரம்பை | 3. பிரண்டை | 4. நாயுருவி | | |
| 07. | 1. ✱ திண்மம் | ✱ திரவம் | ✱ வாயு | | | |
| | 2. ✱ மாட்டெரு | ✱ ஆட்டெரு | ✱ பறவை எச்சம் | | | |
| | 3. மு.நல்லதம்பிப் புலவர் | | | | | |
| | 4. ✱ நெருப்புக் காய்ச்சல் | | ✱ மஞ்சள் காமாலை | | | |
| 08. |  | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Google வரலாறும் வளர்ச்சியும்



கூகிள்ப்ளெக்ஸ் முன்பக்கம்
கூகிள்ப்ளெக்ஸ் வரவேற்புப் பலகை



**Google, ஒரு பிரபல்யமான தேடுபொறியாகும். 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் லெரி பேஜ் (Larry page) என்பவருக்கும் அவரது நண்பரான சேர்ஜி ப்ரின் (Sergey brin) என்பவருக்கும் தங்கள் கலாநிதிப் பட்டப்படிப்பிற்காக கெலிஃபோர்னியா (Stanford) பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட ஆய்வொன்றின் பெறுபேறாகவே இந்த இணைய தேடுபொறி அறிமுகமானது**

## ஆரம்பம்

கணினியில் ஒரு விடயம் குறித்துத் தேடும்போது, தேடப்படும் விடயம் அடங்கிய இணையப் பக்கங்களினால் எந்தவொரு இணையப் பக்கம் அதிகம் இணைக்கப்படுகின்றதோ, அதுவே தேடப்படும் விடயத்துடன் தொடர்புபட்ட பதில்


கூகிள் த[illegible]ர்ப்புகளும் சேவைகளும்

என அவர்கள் தமது ஆய்வினை நியாயப்படுத்தினர். இந்த ஆய்வு Stanford பல்கலைக்கழக பட்டப்படிப்புடன் தொடர்புபட்ட ஆய்வு என்பதால், தமது விதிகளை அங்கு பரீட்சித்துப் பார்த்ததோடு, Google தோன்றுவதற்கான காரணகர்த்தாக்களாகவும் இருந்தனர். ஆரம்பத்தில் குறித்த பல்கலைக்கழகத்தின் இணையப் பக்கங்களை தேடுவதற்காக, Google. stanford.edu என்ற பெயர் பயன்படுத்தப்பட்டபோதிலும், அது 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி Google.com என பதிவு செய்யப்பட்டது. 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி Google தனியார் நிறுவனமாக உருவானது. 1999 ஆம் ஆண்டு செப்டெம்பர் 7 இல் இவர்களின் நண்பர் ஒருவரின் மோட்டார் வாகனத் தரிப்பிடத்தில் Google வர்த்தக நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

புதிய நிறுவனத்திற்கு முதலிடுவதில் பலரையும் அணுகி 1.1 மில்லியன் டொலர்களை சேகரித்துக்கொண்டனர். ஆரம்பத்தில் இவர்கள் Googol.com என பெயர் சூட்டுவதில் மிகுந்த ஆர்வமாக இருந்தனர். 'Googol' என்பது 1 ஐ

கூகிள் இலச்சினை

Google

தொடர்ந்து வரும் 100 பூச்சியங்களைக்கொண்ட எண்ணைக் குறிக்கும் பெயராகும். ஆனால், அது பொறியியலாளர் ஒருவரால் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்ததால், அந்தப்



கூகிள் இணையத் தளத்தின் ஆரம்பகால ஹோம்பேஜ்

பெயரை அவர் விட்டுக்கொடுக்க சம்மதிக்கவில்லை. எனவே, இவர்கள் தமது நிறுவனத்திற்கு வேறொரு பெயரைத் தேடுவதில் தீவிரமாக ஈடுபட்ட வேளையில் தவறுதலாக தட்டச்சு செய்த போது பிறந்ததே இந்த 'Google' என்ற புதிய சொல். அதுவரை மோட்டார் வாகனத் தரிப்பிடத்தில் இயங்கி வந்த இந்த நிறுவனம் காலப்போக்கில் சிலிக்கன் பள்ளத்தாக்கிற்கு மாற்றப்பட்டது. அங்கு இரண்டு இடங்களில் Google நிறுவனம் இயங்கியது.

பின்னர் அதிக வருவாய் மற்றும் விரைவான வளர்ச்சி காரணமாக, வாடகை அடிப்படையிலான பெரிய கட்டடத்தொகுதிக்கு 2003 இல் மாற்றப்பட்டது. அன்றிலிருந்து அதே இடத்திலேயே இருப்பதுடன் அக்கட்டடத் தொகுதி Googleplex எனவும் பெயர் பெற்றது. 2006 இல் அந்த கட்டடத் தொகுதியை Google கொள்முதல் செய்து கொண்டது. தேடுபொறியில் தேடப்படும் சொற்களுடன் தொடர்பான விளம்பரங்களை 2000 ஆம் ஆண்டில் இருந்து Google சேர்க்கத் தொடங்கியதோடு, விளம்பரங்கள் இணைப்பக்கங்களின் அமைப்பை குலைக்காமலும், இணைப்பக்கங்கள் கணினித் திரைகளில் விரைவாகத்


லெரி பேஜ் மற்றும் சேர்ஜி ப்ரின்

தோன்றுவதற்காகவும் ஆரம்பத்தில் எழுத்துருக்களில் மட்டுமே வடிவமைக்கப்பட்டிருந்தன.

நாளடைவில் கூகிளுடன் போட்டி போட்ட பல புதிய நிறுவனங்களும் இணையத்தள சந்தையில் தோற்றுவிட, கூகிள் இலாபமீட்டியதுடன், பல வெற்றிகளையும் ஈட்டத் தொடங்கியது. கூகிள் தேடுபொறி (Google Search) தேடுதலுக்கான பட்டியலிடும் தொழில்நுட்பமானது 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 4 ஆம் திகதி (Page Rank Mechanism) காப்புரிமம் செய்யப்பட்டதுடன், Stanford பல்கலைக்கழக அதிகாரபூர்வ கண்டுபிடிப்பாளர் காப்புரிமத்திலும் பட்டியலிடப்பட்டுள்ளது.



சூரிச்சிலுள்ள அலுவலகம்

## பொதுமக்கள் நிறுவனமாக...

2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதியிலிருந்து Google பொதுமக்கள் நிறுவனமாகத் தன்னைப் பதிவு செய்து கொண்டது. இந்த நிறுவனத்தில் 15,916 முழு நேரப் பணியாளர்கள் (2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி கணக்கெடுப்பின்படி) சேவையில் ஈடுபட்டுள்ளனர். கூகிள் நாஸ்டாக் (NASDAQ) பங்குச் சந்தைக்கு வந்த 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19 ஆம் திகதி 1.67 பில்லியன் டொலர்களுக்கு பங்குகள் விற்பனை ஆகியதுடன், 23 பில்லியன் டொலருக்கும் மேலாக Google நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்தது.

புதிய பொருட்களின் வடிவமைப்பு-அறிமுகம், ஏனைய நிறுவனங்களைக் கொள்முதல் செய்தல், பங்குதாரர்கள், ஆரம்பத்திலிருந்த விளம்பர யுக்தி, விஸ்தரிப்பு, இணைய மின்னஞ்சல், இணையவழி வரைபடம், அலுவலக உற்பத்தி ஆகியவற்றுடன் இணையவழி வீடியோவையும் இணைத்துக் கொண்டதன் மூலமாக பன்மடங்கு (4 மடங்கிலும் மேலாக) மதிப்பில் கூகிள் தன்னைப் படிப்படியாக உயர்த்திக் கொண்டது.



Sun ORACLE

double click

You Tube Broadcast Yourself

my

## கைவசப்பட்டவையும் கூட்டு சேர்ந்தவையும்


பெப்ரவரி 2003 இல் weblog இன் முன்னோடியும் Blogger இன் சொந்தக்காரருமான Pyra Labs ஐ கூகிள் சொந்தமாக்கிக் கொண்டது. 2004 ஆம் ஆண்டின் முற்பகுதியில் Yahoo, AOL, CNN ஆகியனவற்றுடன் கூட்டுச்சேர்ந்து உலக இணையத் தளத்தின் 84.7 சதவீதமான தேடுதல்களை கூகிள் நிறுவனம் செய்திருந்தது. 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி இல் Yahoo விலகிக் கொண்டு தனது சொந்த தேடுபொறியைத் தொடங்கியது. இது கூகிள் நிறுவனத்திற்கு ஒரு பெரிய சவாலாக இருந்தபோதிலும் Gmail, orkut மற்றும் புதிய பல யுக்திகள் மூலம் கூகிள் தன்னை நிலை நிறுத்திக்கொண்டது. அத்துடன், கூகிள் நிறுவனம் தனது நீண்டகால ஆராய்ச்சிக்காக, 2005 இல் நாஸாவுடன் கூட்டுச் சேர்ந்தது. மேலும், Sun Microsystems உடன் தொழில்நுட்பத்தைப் பகிர்ந்துகொண்டதோடு, தனது ஊழியர்களை Open Office.org நிறுவன வேலைகளிலும் வாடகைக்கு அமர்த்தியது. தவிர, 2004-2006 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் பல மென்பொருள் முன்மாதிரி நிறுவனங்களையும் வானொலி விளம்பர நிறுவமான dMarc ஐயும் தன் வசமாக்கிக்கொண்டதுடன், 900 டொலர் பெறுமதியான விளம்பர உடன்பாட்டை MySpace உடன் செய்துகொண்டது.

2006 ஆம் ஆண்டின் இறுதியில் You Tube இணையத்தள வீடியோ,1.65 பில்லியன் டொலருக்கு கூகிளினால் கொள்முதல் செய்யப்பட்டது. தொடர்ந்து விக்கி தொழில்நுட்பத்தை வடிவமைத்த JotSpot உம் சொந்தமாக்கப்பட்டது. கூகிள் நிறுவனம் 2006 இல் mobi எனப்படும் கைத்தொலைபேசி இணைய முகவரியின் தோற்றத்திற்கு காரணகர்த்தாவாகவும் முதலீடு இட்ட நிறுவனமாகவும் முன்நிலைபடுத்தப்பட்டதோடு, Zingku. mobi, Google. mobi இன் சொந்தக்காரராகவும் மாறியது. 2007 ஏப்ரலில் 3.1 பில்லியன் டொலருக்கு Doubleclick உம் அதே ஆண்டு ஜூலையில் Postini யும் கொள்முதல் செய்யப்பட்டன. இவையனைத்தினூடாகவும் இலாபமீட்டிய கூகிள், 2004 இல் இலாபம் ஈட்டாத Google.org ஐ நிறுவியது. இந்நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாக சூழல் வெப்பமயமாகுவதைத் தடுத்தல், உலக சுகாதாரம், உலக வறுமை ஒழிப்பு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனால் உருவாக்கப்பட்ட

**உலகின் இயற்கை அதிசயங்கள் பலவற்றை நாம் 'விஜய்' ஊடாக உங்களுக்கு அறியத் தந்துள்ளோம். தவிர, மனித முயற்சியால் உருவாக்கப்பட்டு பிற்காலத்தில் உலக அதிசயமாக பிரபல்யம் பெற்றவையும் ஏராளம். அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம்.**



பார்தனன் கட்டடம்

## கோல்டன் கேட் ப்ரிட்ஜ்

ஐக்கிய அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் ஒன்றாகிய சென் ஃபிரென்சிஸ்கோ என்றதும் நம் மனக்கண் முன் தோன்றுவது இந்த'கோல்டன் கேட் ப்ரிட்ஜ்' (Golden Gate Bridge) தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீண்டு செல்லும் இந்த தொங்குபாலம் பகல் வேளைகளில் சூரிய ஒளியில் செம்மஞ்சள் நிறப்பாலமாக தோன்றுவதோடு, தூர இருந்து பார்க்கும்போது ஒரு தீப்பிழம்பு போல் ஜொலிக்கிறது. இரவு நேரத்தில் மின் விளக்குகளின் வெளிச்சத்தில் தங்க நிறத்தில் தோற்றம் தரும். இந்த ஜொலிப்பின் காரணமாகவே, இப்பாலத்திற்கு 'கோல்டன் கேட் ப்ரிட்ஜ்' என பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

பசுபிக் கடலை ஊடறுத்து சென் ஃபிரென்சிஸ்கோவிலிருந்து குடா நாட்டிற்கும் மெரைன் கவுண்டிக்குமான ஓர் இணைப்புப் பாலமாகவே இது செயற்படுகிறது. இந்தப் பாலத்தை உருவாக்க நான்கு ஆண்டுகள் எடுத்தன. நிர்மாணப் பணிகள் 1933 ஆம் ஆண்டு ஆரம்பித்து 1937 ஆம் ஆண்டின் ஆரம்ப கட்டத்தில் நிறைவு பெற்றதுடன், மே மாதம் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. எனினும், 1938 ஆம் ஆண்டு தான் வாகனங்கள் இதனூடாக பயணிக்க அனுமதிக்கப்பட்டன.

இதன் நீளம் 8,981 அடியும் (2,737 மீற்றர்) அகலம் 90 அடியும் உயரம் 746 அடியுமாகும். 75,293,000 கிலோ எடை கொண்டது.

பெரிய வாகனங்கள்,சிறிய வாகனங்கள் எனத் தனித்தனியாக செல்லக்கூடிய வகையில் இப்பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. வருடமொன்றிற்கு 40 மில்லியன் வாகனங்கள் இந்தப் பாலத்தினூடாக பயணிக்கின்றன. கடந்த 72 ஆண்டுகளில் மிக மோசமான வானிலை காரணமாக, 3 தடவைகள் இப்பாலம் மூடப்பட்டது.



கோல்டன் கேட் பாலம்

## சிட்னி ஒபேரா ஹவுஸ்

அவுஸ்திரேலியாவின் முக்கிய துறைமுக நகரமாகிய சிட்னியில் அமைந்துள்ள 'ஒபேரா ஹவுஸ்' (Sydney Opera House) ஆனது 20 ஆம் நூற்றாண்டில் மனிதனால் உருவாக்கப்பட்ட முக்கிய அதிசயங்களில் ஒன்று. நவீன கட்டடக் கலைக்குச் சான்று பகரும் இக்கட்டடம், சிப்பி (Shell) வடிவமைப்பில் நிறை குறைந்த பொருட்களால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

கடலுக்கு அருகில் வெள்ளை நிறத்தில் காட்சி அளிக்கும் ஒபேரா ஹவுஸ், பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். இக்கட்டடம் 183 மீற்றர் நீளமும் 120 மீற்றர் அகலமும் கொண்டது. 45 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்துள்ளது. 1973 இல் இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணியால் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. திரைப்பட மாளிகைகள், புகைப்பட நிலையங்கள், உணவு விடுதிகள், விற்பனை நிலையங்கள் எனப் பல பிரிவுகள் இந்தக் கட்டடத்திற்குள் இருக்கின்றன. நாடக அரங்கில் 2,679 ஆசனங்கள் உள்ளன. ஒபேரா திரையங்கில் 1,547 ஆசனங்கள் உள்ளன. ஜோன் உட்ஸன் என்ற ஒல்லாந்தரே ஒபேரா ஹவுஸை வடிவமைத்தார். இதற்கு 102 மில்லியன் அமெரிக்க டொலர் செலவானது.


## அங்கோர் வாட்

கம்போடியா நாட்டின் அங்கோர் நகரில் அமைந்துள்ள ஒரு கோயில்தான் 'அங்கோர் வாட்' (Angkor Wat). இது ஆசியாவில் உள்ள உலக அதிசயங்களில் முக்கியமானது. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சூரியவர்மன் என்ற மன்னர் 800 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கோயிலை கட்டினார். அக்காலத்தில் அங்கோர், கம்போடியாவின் தலைநகராக விளங்கியது. தலைநகருக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் மன்னன் சூரியவர்மன் இந்த கோயிலை நிர்மாணித்தார். இன்று கம்போடியா நாட்டின் அடையாளச் சின்னமாக அங்கோர் வாட் உருவாகியிருக்கின்றது. இந்நாட்டின் தேசிய கொடியிலும் இக்கோயில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

'அங்கோர்' என்றால் 'தலைநகர்' என்று பொருள். 'வாட்' என்றால் 'கோயில்' என்று பொருள். ஆரம்பத்தில் இந்துக் கடவுள் விஷ்ணுக்கான கோயிலாகத்தான் அங்கோர் வாட் திகழ்ந்தது. எனினும், 14 ஆம் மற்றும் 15 ஆம் நூற்றாண்டுகளில் இக்கோயில் பௌத்தர்களின் வசமானது. அதன்பின்னர் இது பௌத்த கோயிலாக மாற்றப்பட்டது. செவ்வக வடிவில் அமைந்துள்ள [illegible]கோயிலைச் சுற்றி அகன்ற அகழிகள் பல காணப்படுகின்றன. எதிரிகள் கோயிலைத் தாக்காமல் இருக்கவே அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன. அகழி நீரில் கோயிலின் வடிவம் அற்புதமாக காட்சியளிக்கும். அகழியைத் தாண்டி அடர்ந்த மரங்கள் உள்ள பகுதியைக் கடந்து சென்றால் கோயிலை அடையலாம். இக்கோயிலைச் சுற்றி பல சிறிய கோயில்களும் உள்ளன. கம்போடியாவின் முக்கிய சுற்றுலாத் தலமாகத் திகழும் அங்கோர் வாட், கம்போடியர்களின் கட்டடக்கலை முன்னேற்றத்திற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

தத்
நாகரி
களுக்





ஒபேரா ஹவுஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட அதிசயங்கள்

## பார்தினன்

தத்துவம், அறிவியல் கண்டுபிடிப்புகள், நாகரிகம், ஒலிம்பிக் என பல அம்சங்களுக்கு உரிமைகோரும் கிரேக்கத்திற்கு மேலும் பெருமை சேர்க்கும் மற்றொரு விடயம் பார்தினன் (The Parthenon) கட்டடம் ஆகும். கி.மு 5 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கட்டடம், கிரேக்க தலைநகர் எதென்ஸில் அமைந்துள்ளது. இன்றளவில் இக்கட்டடம் இடிந்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஏதனா போலியோஸ், ஏதனா பார்த்தினோஸ் ஆகிய இரு தெய்வங்களுடன் தொடர்புபட்டதாக இவ்விடம் உள்ளதால் பார்தினன் மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகின்றது. பார்த்தினோஸ் இருக்கும் இடம் என்பதால் 'பார்தினன்' என்று இந்தக் கோயில் அழைக்கப்பட்டது.

அக்ரோபோலிஸ் என்ற குன்றின்மீது அமைந்துள்ள பார்தினன் கட்டடம் 13,400 பளிங்கு கற்களைக்கொண்டு கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள ஏதனா சிலை யானைத் தந்தம் மற்றும் தங்கத்தால் செய்யப்பட்டுள்ளது. ஏதனா கோயிலானது சுமார் 1000 ஆண்டுகள் வரை மூடப்பட்டிருந்தது. கி.பி 6 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதம் கிரேக்கத்தில் காலூன்றியதோடு, அப்போது கிரேக்கத்தை ஆண்ட அரசர்கள் கிறிஸ்தவ மதத்தை தழுவியதால் பார்தினன் கிறிஸ்தவ தேவாலயமாக மாறியது. இதனையடுத்து, சுமார் 800 ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி 1456 இல் ஒட்டோமன் காலத்தில் இஸ்லாமியர்களால் மசூதியாக மாற்றப்பட்டது. அரசு மாற மாற பார்தினனும் ஒவ்வொரு மதத்திற்குரிய வணக்கஸ்தலமாக மாறியது. தற்போது கிரேக்க அரசு பார்த்தினனை நன்கு பராமரித்து வருகின்றது. அரசர்களின் படையெடுப்பு, நிலநடுக்கம் போன்ற காரணங்களால் பார்தினன் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதனால், பார்தினனின் உயரத்தைச் சரியாகக் கணிக்க முடியவில்லை. சில பகுதிகளில் 228 அடி உயரத்துடனும் இன்னும் சில பகுதிகளில் 111 அடி உயரத்திலும் காணப்படுகின்றது.



ஷ்வேதகொன் பாகொட

## ஷ்வேதகன் பாகொட

ஆசியாவில் இருக்கும் இன்னுமோர் அதிசயம் ஷ்வேதகன் பாகொட (Shwedgon Pagoda). தங்கத்தாலான கோபுரங்களை தன்னகத்தேகொண்ட இக்கோயில், மியன்மாரில் உள்ள யான்கோன் நகரில் காணப்படுகின்றது. அண்மையில் கட்டப்பட்டதோ என நினைக்கும் வகையில் பளபளக்கும் தோற்றமுடைய ஷ்வேதகன் பாகொட சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. ஆரம்பகாலத்தில் 18 மீற்றர் உயரம் கொண்டதாகவே இந்தக் கோயில் இருந்தது. காலம் செல்லச்செல்ல கோயில் மறுசீரமைக்கப்பட்டுக்கொண்டே வந்தது. 15 ஆம் நூற்றாண்டில் கோயிலின் உயரம் 98 மீற்றராக உயர்த்திக் கட்டப்பட்டது.

இக்கோயில் உருவான கதை மிகவும் சுவாரஸ்யமானது. டபுஸ்ஸா மற்றும் பாலிகா ஆகிய இரு சகோதரர்கள் மியன்மாரில் புத்த பெருமானைச் சந்தித்துள்ளனர். அப்போது புத்த பெருமானிடமிருந்து அவரது 8 தலைமயிர்களைப் பெற்றுக் கொண்டனர். இந்த தலைமயிர்களை எடுத்துச் சென்று மியன்மாரின் அரசர் உக்கலபாவைச் சந்தித்து, அதனை வைப்பதற்காக கோயில் கட்டுவதற்கு உதவி வழங்குமாறு கேட்டிருக்கிறார்கள். மன்னரும் சிங்குத்தாரா மலையில் கோயிலை நிர்மாணிக்குமாறு கூறியுள்ளார். இதன்படிதான் ஷ்வேதகன் பாகொட கட்டப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. அந்தக் கோயிலிலுள்ள தங்கப் பேழையில் வைத்து புத்தரின் தலைமயிர்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 'பாகொட' என்றால் 'கோயில்' என்பது அர்த்தமாகும்.



ஷ்வேதகொன் பாகொடவின் தென் நுழைவாயில்

ஷ்வேதகன் பாகொடவில் நான்கு பிரமாண்டமான நுழைவாயில்கள் உள்ளன. கோபுரத்தின் உட்பகுதி செங்கற்களாலும் மேற்பகுதி தங்கத்தகட்டாலும் மூடப்பட்டுள்ளது. தரைப்பகுதி வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு நான்கு பெரிய கோபுரங்களும் 63 சிறிய கோபுரங்களும் உள்ளன. கோயிலுக்குள் இருக்கும் புத்தரின் குடை நுனியில் 5448 வைரங்களும் 2317 ரூபி கற்களும் பதிக்கப்பட்டுள்ளன. இங்கிருக்கும் வாழைப் பூ மொட்டு, கிரீடம், தாமரை மலர், புத்தருக்காக வைக்கப்பட்டுள்ள கிண்ணம், மணி போன்றவை மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அரசர்களும் செல்வந்தர்களும் இந்தக் கோயிலுக்கு கிலோ கணக்கில் தங்கத்தைக் காணிக்கையாகச் செலுத்தும் வழக்கம் இருந்து வருகிறது. இன்றும் பக்தர்கள் தங்கத்தைக் காணிக்கையாகச் செலுத்தி வருகின்றனர். இதனால், கோயிலை நன்கு பராமரிக்கக்கூடியதாக இருப்பதோடு, தங்கத்தால் கோயிலை இழைக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. இன்றுவரை உலகம் முழுவதிலும் இருந்து பௌத்த பிக்குகள், பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் என பெருந்தொகையானோர் இந்தக் கோயிலுக்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

## ஸ்டோன்ஹென்ஜ்

பிரித்தானியாவின் தேசிய அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படும் 'ஸ்டோன்ஹென்ஜ்' (Stonehenge) சலிஸ்பரி என்ற இடத்தில் வட்ட வடிவில் மிக உயரமான கற்கள் செங்குத்தாக இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. வானியல் ஆய்விற்காக நிறுவப்பட்டுள்ள இது, பூமித் தாயை வணங்கும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றும் சமூகத்தில் உயர் அந்தஸ்து உடையவர்கள் இறந்த பின்னர் அவர்களை அடக்கம் செய்ததன் அடையாளமாக உள்ளதாகவும் இதுகுறித்து பல கருத்துக்கள் நிலவுகின்றன. தவிர, செங்குத்தாக பாறைகள் வைக்கப்பட்டுள்ளமை குறித்தும் பல காரணங்கள் தெரிவிக்கப்பட்டபொழுதிலும், இந்தக் கற்கள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான சரியான தகவல்கள் இன்றுவரை தெளிவாகவில்லை. ஆனால், முக்கியமானதொரு காரணத்திற்காகத்தான் முன்னோர்கள் இந்தக் கற்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பது மட்டும் நிச்சயம். பழைய கற்கள் பல உடைந்து போய்விட்டன. போக்குவரத்திற்காக சில கற்கள் அகற்றப்பட்டுவிட்டன.

கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வட்டக்கற்கள் வைக்கப்பட்டிருந்தன. இவை 'நீலக்கற்கள்' என அழைக்கப்பட்டன. 240 மைல்கள் தூரத்தில் இருந்து இந்தக் கற்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. ஒவ்வொரு கல்லும் 4 தொன் நிறை கொண்டவை. மொத்தம் 80 கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்காலத்தில் இத்தகைய பாரிய கற்கள் எவ்வாறு இவ்விடத்திற்குக் கொண் வரப்பட்டிருக்கலாம் என்பது ஆச்சரியப்பட வைக்கின்றது.

நீலக் கற்களுக்கு அடுத்து ராட்சத கற்கள் நிற்க வைக்கப்பட்டுள்ளன. இது ஒவ்வொன்றும் 50 தொன் நிறை கொண்டது. வட்டக்கற்களில் இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. மான்கொம்புகள், கூர்மையான மரக்குச்சிகள் போன்றவற்றினால் நிலத்தைத் தோண்டி இந்தக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. கி.மு 2200 ஆம் ஆண்டுக்குரியதாகக் கருதப்படுகின்ற இந்தக் கற்கள், நிலத்தை ஆராய்ச்சி செய்தபோது கிடைத்தன. 'ஸ்டோன்ஹென்ஜ்' என்றால் 'நிமிர்ந்து நிற்கும் கற்கள்' என்று பொருள்.

**-இரஞ்சித் ஜெயகர்**



அங்கோர் வாட்



ஸ்டோன்ஹென்ஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரங்கள் மூன்று

ஒருநாள் பூலோகத்திற்குக் கடவுள் வந்தார். அச்சந்தர்ப்பத்தில் அவர் ஓர் ஏழை விவசாயி வீட்டை கடந்து செல்கையில் விவசாயியும் அவனது மனைவியும் மகனும் மாம்பழத்தை கஷ்டப்பட்டு பறிக்க முற்படுவதைக் கண்டார்.

'அவர்களுக்கு உண்பதற்கு உணவின்றித் தான் அந்த மாம் பழத்தை சிரமப்பட்டுப் பறிக்க முற்படுகின்றனர். பாவம்! அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்'' என கடவுள் நினைத்தார். அதனால், அவர் அந்த மரத்தில் தோன்றி, ''நான் உங்களுக்கு மூன்று வரங்கள் தருவதற்கு ஆயத்தமாக உள்ளேன். உங்களுக்கு வேண்டியவற்றைக் கேளுங்கள். தருகிறேன்'' என்றார்.

''என்ன! மூன்று வரங்களா?'' என ஆச்சரியத்துடன் களிப்படைந்த விவசாயியின் மனைவி ''நான் இந்த உலகிலேயே அழகிய பெண்ணாக மாற வேண்டும்'' என்றாள். உடனே அவள் அழகிய தோற்றத்தைப் பெற அப்போது அங்கே குதிரையின் மேலேறிச் சென்று கொண்டிருந்த இளவரசனொருவன் அவளது தோற்றத்தைக் கண்டு மயங்கி அவளைக் கட்டாயப்படுத்தி குதிரை மேலேற்றி தன்னுடன் அழைத்துச் சென்றான்.

இதனால் விவசாயி செய்வதறியாது தடுமாற தன் மனைவியைக் காப்பாற்றும் பொருட்டு, குதிரை மேலிருக்கும் என் மனைவி மனிதனை இரையாக உண்ணும் புலியாக மாற வேண்டும். அப்போது இளவரசன் என் மனைவியை விட்டுவிடுவான்'' என்றான். உடனே மனைவி புலியாக மாற இளவரசன் பயந்து மயக்கமுற்று குதிரையிலிருந்து கீழே விழுந்தான். பின் விவசாயியும் மகனும் இருந்த இடத்திற்கு புலியாக மாறிய மனைவி பாய்ந்து வந்தாள். தாய் புலியாக மாறியுள்ளதைக் கண்ட விவசாயியின் மகன் ''எனக்கு அம்மா வேண்டும்....'' என அழத் தொடங்கினான். பின் விவசாயி ''புலியாக மாறியுள்ள தன் மனைவி மீண்டும் எனது மனைவியாக மாற வேண்டும்'' எனக் கூற புலியின் தோற்றம் மாறி விவசாயியின் மனைவி தனது நிஜ உருவைப் பெற்றாள். பழைய தோற்றத்தைப் பெற்ற விவசாயியின் மனைவி தன் கணவர், பிள்ளையை நோக்கி ஓடி வரலாயினாள்.

இதனால், கடவுளுக்கு மிகுந்த கவலை. மூன்று வரங்கள் கொடுத்தும் அவற்றால் விவசாயியின் குடும்பத்தினர் பிரயோசனமடையவில்லையே என்று கவலைப்பட்டார். பின்னர் ''பரவாயில்லை. கடைசியாக அவர்களுக்கு மாம்பழத்தைப் பறித்துக்கொள்வதற்காவது இடமளிப்போம்'' என்று நினைத்தார். அதனால், இறுதியாக அந்த மாம்பழம் மாத்திரம் தான் விவசாயக் குடும்பத்திற்குக் கிடைத்தது. இது ஒரு கதைதான் ஆனாலும் கிடைக்கும் சந்தர்ப்பத்தை சிந்தித்துப் பயன்படும் வகையில் செயற்பட்டால் நன்மை அடையலாம் என்பதையே இது உணர்த்துகின்றது.

*பாத்திமா ஸப்ரினா நசீர்,*
*தரம் - 11B, இ/சீ.சீ.த.ம.வித்.,*
*பலாங்கொடை.*



# ஒற்றுமையே பலம்

உலகில் இன்று எங்கு பார்த்தாலும் சண்டையும் சச்சரவுகளும் கருத்து வேற்றுமைகளும் மலிந்து காணப்படுகின்றன. எனினும், சமாதானம், ஒற்றுமை எனக் குரல் எழுப்பப்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றது. ஒற்றுமையைக் கெடுக்க அல்லது சீரழிக்க இந்த உலகில் எத்தனையோ விடயங்கள் காரணமாக இருக்கின்றன. எனினும், நாம் அவற்றை ஒருபுறம் தள்ளிவிட்டு ஒற்றுமை எனும் கயிற்றைப் பலமாக பிடித்துக் கொள்வதன் மூலம் சமாதானமாக வாழக்கூடிய நிலை உருவாகும்.

மக்களின் சிறப்பான வாழ்க்கைக்கும் அமைதிக்கும் ஒற்றுமை எனும் வெற்றிக் கொடி மிகவும் அவசியமாகும்.



'ஒற்றுமையே உயர்வுக்கு வழியாகும்' என எல்லா மதங்களும் எடுத்தியம்புகின்றன. எனினும், நாம் இன்று இன, மத, மொழி என்பனவற்றால் வேறுபட்டுக்கொண்டே போகிறோம். அதனால், நாம் எல்லா விடயங்களிலும் பலவீனமாகவே இருக்கின்றோம்.

எல்லோரும் சகோதரர்கள் என்ற உணர்வு நம் மத்தியில் ஏற்படுதல் வேண்டும். நம்மிடம் காணப்படும் பகைமை எண்ணங்கள் நீங்கி, இரக்கமும் அன்பும் பெருகும்போதே ஒற்றுமை உருவாகும்.

எனவே, 'ஒற்றுமையே பலம்' என்பதனை உணர்ந்து நாமும் நமது வாழ்க்கையை மாற்றியமைத்து ஒற்றுமை வளர உறுதி பூணுவோமாக!

**ஃபாத்திமா தஹ்ரா,தரம் - 8,**
**மாறை/அந்நூர் மு.வித்.,**
**வெலிகம.**

# கதிரவன் வருகை



காலைக் கதிரவன் வருகின்றான்
கரங்களை விரித்துக் காட்டுகின்றான்
எல்லோரையும் துயிலெழுப்புகிறான்
மலர்களை மலரச் செய்கின்றான்.

பறவைகள் விழித்து எழுந்திடுமே
ஆரவாரங்கள் செய்திடுமே
வண்டுகள் பூக்களை நாடிடுமே
தேனை அருந்தி மகிழ்ந்திடுமே.

பாலர் பாடசாலை சென்றிடுவார்
தொழிலாளர் வேலைக்கு சென்றிடுவார்
சூரியன் வரவு கண்டே நாம்
மனமகிழ்வு கொள்வோமே

எஸ்.நிறோஜன்,
யா/வைத்தீஸ்வராக் கல்.,

# நல்ல நட்பு




'நட்பு' என்பது ஒரு புனிதமான மகத்தான உறவு. வாழ்வில் நலிவடையும் காலங்களில் எமக்குக் கைகொடுக்கும் உறவு ஒன்று இருக்குமாயின், உண்மையில் அது நட்பு ஒன்றேதான். மேலும், ஒரு சமுதாயம் நோயற்று, ஆரோக்கியமாக வாழ நட்பு இன்றியமையாததாகின்றது.

வாழ்க்கையை ரசிக்கக் கற்றுக் கொள்ளும்போதுதான் துயரங்கள் மறைகின்றன. அவ்வாறு ரசிப்பதற்கு நட்பு உறுதுணையாகிறது. மேலும் கெட்ட நண்பனைவிட, தனிமை மேலானது. தனிமையை விட, நல்ல நண்பர்களுடன் கூடி இருப்பது மிகச் சிறந்ததாகும். நட்புக் கொள்வதென்பது வெறுமனே ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் ஒன்றல்ல. நண்பன் நெறிகெட்டுச் செல்லும்போது, முன்சென்று இடித்துரைத்து அவனை நல்வழிக்குக் கொண்டுசெல்வதே சிறந்த நட்பாகும்.

புனிதமான நட்பு எல்லா சுயநலங்களையும் விட்டும் குறுகிய எண்ணங்களிலிருந்தும் தூரமானதாகவும் விடுபட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

அன்பு ஒரு பூங்காவனம் போன்றது. தாங்க முடியாத துயரம், துன்பத்தில் எமது நம்பிக்கை பலவீனமடையும்போதும் வறுமையிலும் துக்கத்திலும் வளம்பெற நல்ல நட்பு சகவாசம் அவசியமாகின்றது.



ஆர்.எஃப்.முஸைனியா,
தெலம்புகல.

# மூத்தோர் மொழிந்தவை

✸ வாழ்க்கை மறைபொருளாக இருக்கிறது. அதனால்தான் அது ரம்யமாக இருக்கின்றது.
*-காண்டேகர்*

✸ குணத்தில் மிக உயர்ந்தவர்களும் அடிமட்டத்தில் இருப்பவர்களும் மாறவே மாட்டார்கள்.
*-சிங்செள*

✸ பொருளற்றவனைக் காட்டிலும் பொருள் உடையவனே அதிகம் துன்பமடைகிறான்.
*-மகாத்மா காந்தி*

✸ தனது நிலையிலிருந்து வேறுபடாமல் அடங்கி வாழ்பவனின் உயர்வு மலையின் உயரத்தைவிடப் பெரியது.
*-திருவள்ளுவர்*

✸ வறுமையில் நிறைவு காண்பவனே மிகப்பெரிய பணக்காரன்.
*-கொரியப் பழமொழி*

✸ எளிய வாழ்வைப் பற்றிப் பேசுவதற்கோ, எழுதுவதற்கோ நாம் தயங்குவதில்லை; ஆனால் வாழ்வதற்குத் தயங்குகின்றோம்.
*-மு.வ*

✸ இன்பத்தை எண்ணலாம்; விரும்பலாம்; அடையலாம். ஆனால், விலைக்கு வாங்க முடியாது.
*- மாகஸின் டைஜெஸ்ட்*

✸ பகைமையை இவ்வுலகில் ஒருபோதும் பகைமையால் வெல்ல முடியாது. அன்பினாலேயே வெற்றி கொள்ளமுடியும்.
*-புத்தர்*

✸ உயிர்வாழ உபயோகமாகும் தண்ணீர். சில சமயங்களில் உயிரையே குடித்து விடுகின்றது.
*-அண்ணா*

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு சக்கர உழவு இயந்திரத்தை அறிமுகப்படுத்திய இலங்கையர்

உலகில் அறிவு, ஆக்கத்துறைகளுக்கு பங்காற்றிய பலர் உள்ளனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவரே விஞ்ஞான ஜோதி கலாநிதி பிலிப் ரேவத விஜேவர்தன ஆவார்.

இவர் கல்கிசை சென்.தோமஸ் கல்லூரியில் மாணவராக இருந்த பருவத்திலேயே திறமைகளை வெளிப்படுத்த ஆரம்பித்தார். ஒருநாள் அவர் ஆகாய விமான தொழில்நுட்பம் தொடர்பான நூல்களை வாசித்துப் பெற்றுக்கொண்ட அறிவைக்கொண்டு, சிறிய ஆகாய விமானம் ஒன்றைத் தயாரித்து அதில் தானும் அமர்ந்து இயக்கினார். அப்போது அது சற்று மேல் எழுந்து திடீர் என்று கீழே வீழ்ந்துவிட்டது. அப்போது அவரின் வயது 16-17 இருக்கும்.

''நான் உனக்குத் தண்டனை வழங்குவது நீ விமானம் தயாரித்ததற்கு அல்ல, அதனைச் சரியான முறையில் நிவர்த்தி செய்யவில்லை என்பதற்காகவே'' என்று கூறி அப்போதைய கல்லூரி அதிபர் இவரை எல்லோர் முன்னிலையிலும் தண்டித்தார்.

பிற்காலத்தில் அந்த மாணவன் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வானவியல் விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்று ஆகாய விமான தொழில்நுட்பத்திலும் தேர்ச்சி பெற்று ஓர் ஆகாய விமானத்தைத் தயாரித்து அதில் பறந்து சாதனையும் புரிந்தார். இவரை அனைவரும் கலாநிதி ரே என்றே அழைக்கின்றனர்.


## விவசாய விஞ்ஞானி

தான் சிறுபராயத்தில் ஆசைப்பட்டது போன்று விண்வெளி ஆய்வு விஞ்ஞானியானபோதும் அதனால், சாதாரண மக்களுக்காக எதையும் தன்னால் செய்ய முடியாது என்பதை நினைத்துக் கவலைப்பட்டார். அதனால், அவர் மேலும் பட்ட மேற்படிப்புப் பயின்று பொறியியல் துறையில் பட்டமும் பெற்று இயந்திர நுட்பவியல் பொறியலாளர் ஆனார்.

பின்னர் இலங்கைக்குத் திரும்பிய அவர் கலாவெவ பகுதிக்கு விஜயம் செய்து அங்கு வயலில் வேலை செய்யும் விவசாயிகள் வயலை உழுவதற்காகப் படும் கஷ்டங்களைப் பார்த்தார். அப்போது, இந்த விவசாயிகளுக்கு உதவும் வகையில் தமது அறிவால் என்ன செய்யமுடியும் என்று சிந்தித்தார். இதுபற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். அந்த ஆராய்ச்சிகளின் பலனாக, 1956 ஆம் ஆண்டு இரண்டு சக்கரங்களில் இயங்கும் உழவு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

## சூழல் விவசாயத்தில் ஈடுபாடு

1974 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரையில் நைஜீரியாவில் இபாடன் பிரதேசத்தில் வறண்ட வலய விவசாயச் செய்கை தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். சர்வதேச விவசாய மன்றம் ஒன்றில் இணைந்து அந்நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்காக பணியாற்றி அதிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் நாடு திரும்பினார்.



இலங்கை திரும்பிய விஜேவர்தன மஹாஇலுப்பல்லம விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இணைந்து சுற்றாடல், பாதுகாப்பு, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

## விறகு மின்சாரத்தின் தந்தை

இலங்கைக்கு விறகு மின்சாரத்தை (Dendro Power) அறிமுகப்படுத்தியவரும் கலாநிதி ரே விஜேவர்தனவே ஆவார். நிலக்கரி, எரிபொருள் என்பனவற்றைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதைவிட, விறகைப் பயன்படுத்தி மின்சாரம் பெறுவது மிகவும் பொருத்தமானது என்று உணர்ந்தார். மாதம்பையில் அவருக்குச் சொந்தமாக அமைந்துள்ள கொஹம்பேவத்தையில் உள்ள தென்னந்தோப்பு அவருடைய விவசாய ஆராய்ச்சிக்குரிய நிலமாகியது.

தென்னைக்குத் தேவையான நைதரசனை வழங்கக் கூடிய 'கிளிரிசீடியா' என்ற மரங்களை தென்னை மரத்திற்கு அருகில் வளர்ப்பதால் சிறந்த தெங்கு அறுவடையை பெறலாம் என்பதைக் கண்டுபிடித்தார். அத்துடன், அந்த இடத்திற்குத் தேவையான மின்சாரத்தை இந்த மரத்தைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஒருவகை வாயுவைக்கொண்டு தயாரிக்கலாம் என்பதையும் ஆராய்ச்சி மூலம் கண்டறிந்தார்.



## வேந்தர் பதவி

அவரது இத்தகைய சேவைகளுக்கு கௌரவமளிக்கும் வகையில் பேராசிரியர் ரே விஜேவர்தன 2002 ஆம் ஆண்டு மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக (Chancellor) நியமிக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது 78 ஆகும்.

## சிறந்த விளையாட்டு வீரர்

ரே விஜேவர்தன ஆரம்பகாலம் முதல் விளையாட்டுத்துறையிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வந்துள்ளார். 1968 ஆம் ஆண்டு மெக்சிகோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இலகு வள்ளம் செலுத்தும் போட்டியில் 3 ஆம் இடத்தையும் தாய்லாந்தில் நடைபெற்ற வள்ளம் செலுத்தும் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்.

## சிறந்த மனிதனின் மறைவு

சிறந்த விஞ்ஞானியும் கண்டுபிடிப்பாளருமான அவர் அவரது சகாக்களுக்கும் மாணவர்களுக்கும் எப்போதும் முன்னேற்றத்திற்கும் உயர்ச்சிக்கும் வழிகாட்டினார். அதற்காக, அவரது அறிவு, செல்வம், முயற்சி அனைத்தையும் அர்ப்பணித்தார். 1924 ஆம் ஆண்டு பிறந்த உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியான ரேவத விஜேவர்தன அவரின் 86 ஆவது வயதில் அண்மையில் (2010) காலமானார். அவரின் மறைவு அறிவுலகிற்கு ஒரு பேரிழப்பாகும்.

**அமீர் ஹுசைன்**


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

பாடசாலை:..............................

வகுப்பு:..............................

திகதி:..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு


## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3825

எஃப்.சுரைஹா, தரம் - 2[B], அல்-ஃபஹ்ரியா மத்.கல்., பாணந்துறை.



அங்.இல: 3826

அபிலாஷ், தரம் -4[F], இந்துக் கல்., கொழும்பு.



அங்.இல: 3827

அ.சங்கவை, தரம் - 4, வெ.க.உயர் தர வித்., வவுனியா.



அங்.இல: 3828

சி.சுரேஸ்கோபி, தரம் - 5, தலாத்துஓய த.ம.வித்., தலாத்துஓய.



அங்.இல: 3829

ஜே.துஷாந்தன், தரம் - 5[M], கார்மேல் பாத்திமா கல்., பாண்டிருப்பு.



அங்.இல: 3830

ஏ.ஷாதிர், தரம் - 6[D], அஸ்ஹர் கல்., அக்குறனை.



அங்.இல: 3831

ராம்.பாவேந்தன், தரம் - 7[U], காமினி ம.வித்., வவுனியா.



அங்.இல: 3832

கே.ஜெயபிரதாப், தரம் - 9, புனித அந்தோனியார் கல்., வத்தளை.



அங்.இல: 3833

எம்.ஜஸீர், தரம் - 9[A], அல்-அஸ்ஹர் வித்., கல்முனைக்குடி.



அங்.இல: 3834

எம்.ராய்ஸ்கான், தரம் - 11[RA], காத்தான்குடி மத்.கல்., காத்தான்குடி.



அங்.இல: 3835

ரமீஸ் சஃபீர், தரம் - 11, கெக்கிராவ மு.ம.வித்., கெக்கிராவ.



அங்.இல: 3836

ந.நர்மதன், உயர் தரம், மீசாலை வீரசிங்கம் ம.வித்., மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாஞ்சோலை, கிண்ணியா-03 இல் அமையப்பெற்றுள்ள நிஷா பாலர் பாடசாலையினால் ‘டெங்கு ஒழிப்பு’ எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டதை படங்களில் காணலாம்.

(தகவல்: ந.மு.றுஸ்மில், படப்பிடிப்பு: எஸ்.எம்.இம்ரான்)

## விஜய் ‘விழா உலா’ த.பெ.எண் 2037 கொழும்பு



வியாங்கல்லையைச் சேர்ந்த இர்பான்-சியானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஹப்ஸா, 02.11.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: றுஸ்தா றிஸான்)



அநுராதபுரம், அளுத்கமயைச் சேர்ந்த எம்.றாசிக்-பஸ்லியா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஹிக்மா, 29.10.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் நல்லன கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.




மீசாலை கிழக்கைச் சேர்ந்த குலராசா-விஜயலட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வன் சகாயன், 02.11.2010 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர், உறவினர்கள் அனைவரும் பிள்ளையார் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## ஓவியம் வரைவோம் - 23

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

நாம் அண்மைய பாடங்களினூடாக உடல் உறுப்புக்கள், அவற்றின் அமைவுகள் பற்றி வரைந்து பயிற்சி பெற்று வருகிறோம். அதற்கமைய, இப்பாடத்தில் ஆண், பெண் உருவங்களில் வயிற்றிலிருந்து தோள் வரையான முன்-பின் அமைப்புகளை வரைந்து பயிற்சி பெறுவோம்.

- படம் A யில் ஆண்களின் பின்புறம் பலவாறு வரையப்பட்டுள்ளது.
- படம் B யில் பெண்களின் பின்புறம் வரைந்து காட்டப்பட்டுள்ளது.
- C எனக் குறிக்கப்பட்டுள்ள படத்தில் பெண்களின் முன்பக்கத் தோற்றம் பல கோணங்களில் காட்டப்பட்டுள்ளது.
- D யில் ஆண்களின் பின்புறத் தோற்றம் மற்றுமொரு வகையில் வரையப்பட்டுள்ளது.
- படம் E யில் பெண்களின் முன்புறத்தோற்றம் பிறிதொரு வகையில் வரையப்பட்டுள்ளது.




## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.பைசல், உயர் தரம் (கலை), ஸாஹிரா தே.பாட., அநுராதபுரம்.



எம்.தஸ்னீம், தரம் - 8C, ஊவா விஞ்ஞானக் கல்., ஹாலி-எல.



ந.மலரினி, தரம் - 11, ஓமந்தை மத்.கல்., வவுனியா.



இன்சாபா மஹரூர், தரம் - 10B, ஸாஹிரா தே.பா., ஹம்பாந்தோட்டை.




வே.மதுஷா, தரம் - 7C, சித்திவிநாயகர் இ.கல்., மன்னார்.



எம்.ஜனனி, தரம் - 11C, கொட்டகலை த.ம.வித்., கொட்டகலை.



எஃப்.ரிஃப்லா, தரம் - 6B, அலிகார் மு.வித்., கல்-எளிய.



றாசத் றவ்ஸா, பாலர் வகுப்பு, கோப் இல்மா கொலேஜ் நேசரி, காத்தான்குடி-06.



வி.றெனுசன், தரம் - 7, சுந்தரமூர்த்தி நாயனார் வித்., காரைநகர்.



என்.யசோதரன், தரம் - 4, விக்னேஸ்வரா த.ம.வித்., பன்வில.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்டவ்ய மகரிஷி

ஞான உறுதியும், சாஸ்திர அறிவும் நிரம்பப் பெற்ற மகரிஷிதான் மாண்டவ்ய மகரிஷி. அவர் ஊருக்கு வெளியே ஒரு வனத்தில் ஆசிரமம் அமைத்து வசித்து வந்தார். ஒருநாள் அவர் ஆசிரமத்துக்கு வெளியே ஒரு மரத்தடியில் தியானத்தில் ஆழ்ந்திருந்தபோது, சில கொள்ளையர்கள் அந்தப் பக்கமாக வந்தனர். அவர்களை அரண்மனைச் சேவகர்கள் துரத்திக்கொண்டு



வந்தனர். அவர்களிடமிருந்து தப்பிக்க அந்த கொள்ளைக்காரர்கள் மாண்டவ்ய ரிஷியின் ஆசிரமத்துக்குள் நுழைந்து விட்டனர். கொள்ளை அடித்த சொத்துக்களை, ஆசிரமத்தின் ஒரு மூலையில் வைத்துவிட்டு மற்றொரு புறத்தில் ஒளிந்துகொண்டனர்.

அரண்மனைச் சேவகர்கள் திருடர்களைப் பின்தொடர்ந்து மாண்டவ்ய ரிஷியின் ஆசிரமத்துக்கு வந்தனர். வாசலிலிருந்த மரத்தடியில் ரிஷி தியானத்தில் இருப்பதைப் பார்த்தனர். ''முனிவரே! இந்த வழியே திருடர்கள் வந்தனரே, அவர்கள் எங்கே?'' என்று கேட்டபோது அவர் பதிலேதும் கூறாது மௌனமாகவே இருந்தார். படைத்தலைவன் இவ்வாறே திரும்பவும் கேட்டான். முனிவர் எதுவும் கூறாது மௌனமாக இருந்தார்.

அதற்குள் ஆசிரமத்துக்குள் சேவகர்கள் நுழைந்து களவுபோன சொத்துக்கள் அங்கே இருப்பதைக்கண்டு படைத்தலைவனை அழைத்தனர். அங்கே ஒளிந்திருந்த திருடர்களையும் பார்த்துவிட்டனர். அப்போது படைத்தலைவன் முனிவர் அருகில் வந்து, ''இப்போது எல்லாம் புரிந்து விட்டது. இவர்தான் இந்த திருடர்களின் தலைவன். இவருடைய தூண்டுதலால்தான் இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது'' என்று கூறிவிட்டு நாட்டு அரசனிடம் போய் அந்தத் தகவலைக் கூறினான்.

அரசன் விசாரணை ஏதும் செய்யாமலே, ''இந்த மோசக்காரப் பாதகனை உடனே சூலத்தில் ஏற்றுங்கள்'' என்று கட்டளையிட்டான். படைத்தலைவன் மாண்டவ்ய ரிஷியை சூலத்தில் ஏற்றிவிட்டு கைப்பற்றிய பொருட்களை அரண்மனைக்கு எடுத்து வந்தான். ஆனால், சூலத்தில் குத்தியேற்றப் பட்ட தர்மாத்மா வான மாண்டவ்யர் யோகத்திலிருந்த காலத்தில் குத்தப்பட்ட படியால் அந்த யோக சக்தியால் அப்படியே உயிரு டனிருந்தார். அப்போது தவ முனிவர்கள் பலர் அங்கே வந்து, அந்த கொலைபாதகச் செயலைக் கண்டு அலறினர்.

''ஓ மாண்டவ்ய ரிஷியே! இந்தக் கொடூரத்தை செய்தது யார்?'' என்று கேட்டனர்.

''நாட்டைக் காக்கும் அரசனுடைய சேவகர்கள் இந்தத் தண்டனையைக் கொடுத்துள்ள னர்'' என்றார். வனத்தில் அன்ன ஆகாரம் எதுவுமின்றி சூலத்தில் குத்தப்பட்ட நிலையில் மாண்டவ்ய ரிஷி சாகாதிருப்பதையும் ரிஷிகளின் கூட்டமும் மக்கள் கூட்டமும் அங்கே தினமும் கூடி நின்று வணங்குகின் றனர் என்பதையும் நாட்டு மன்னன் அறிந்தான். ஆச்சரியமடைந்து அந்த இடத்திற்கு வந்து பார்த்தான். அவனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. இவர் நிச்சயம் பெரிய மகரிஷியாகத் தான் இருக்க வேண்டும். நான் பெரிய தவறு செய்துவிட்டேனே என்று உணர்ந்து வருந்தினான். மகரிஷியை இறக்கிவிட்டு மகரிஷியின் காலில் விழுந்து நமஸ்கரித்து, ''அறியாமை யால் நான் இந்தப் படுபாவத்தைச் செய்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்'' என்று வேண்டினான்.

மாண்டவ்ய ரிஷிக்கு அரசன் மீது எந்தவிதக் கோபமும் வரவில்லை. அவர் நேராக தருமதேவதையிடம் சென்று, ''நான் இத்தகைய துன்பத்தை அனுபவிக்க வேண்டியதன் காரணம் என்ன?'' என்று கேட்டார்.

ரிஷியின் தவ வலிமையை அறிந்த தரும தேவதை பயந்து பணிவுடன் பதில் கூறியது, ''சுவாமி! தாங்கள் பட்சிகளையும் வண்டுகளையும் இம்சித்தீர்கள். அதனால்தான் இந்த தண்டனை''

''இந்தக் கொடுமையை நான் எப்போது செய்தேன்?'' என்று கேட்டார் ரிஷி.

''குழந்தையாக இருந்த காலத்தில் செய்தீர்கள்'' என்றது தரும தேவதை.

''சிறிய வயதில் அறியாமல் செய்த குற்றத்திற்கு இத்தனை பெரிய தண்டனையை நீ எனக்கு விதித்தது பெருங்குற்றம். இதற்காக நீ பூலோகத்தில் மனிதனாகப் பிறப்பாய்'' என்று தருமதேவதையை மாண்டவ்ய ரிஷி சபித்தார். மாண்டவ்ய ரிஷியின் சாபத்தைப் பெற்ற தருமதேவதை, விசித்திர வீரியனின் மனைவி அம்பாலிகையின் வேலைக்காரியின் வயிற்றில் விதுரனாக அவதரித்தார் என்கிறது மகாபாரதக் கதை.




# கோபக்கார தேனீயிடம் சிக்காமல்....

சின்னப் பூச்சி பிறந்ததை ஒருவரும் பார்க்க வில்லை. வசந்தகாலம். பளிச்சென்று வெயில் அடித்துக் கொண்டிருந் தது. சின்னப் பூச்சி நாலா பக்கமும் பார்த்தது.

''ஆகா, நன்றாக இருக்கிறது'' என்றது.

தனது சின்னச் சிறகுகளை விரித்து, மெல்லிய கால்களை ஒன்றோடொன்று தேய்த்தது. இன்னொரு தரம் சுற்றும் முற்றும் பார்வையைச் செலுத்தியது.

''எவ்வளவு நன்றாக இருக்கிறது! வெயில் எவ்வளவு இதம்! ஆகாயம் எவ்வளவு நீலம். புல் எவ்வளவு பச்சை! நன்றாக இருக்கிறது. ஆகா! எல்லாம் எனக்கே சொந்தம்'' என்று சொல்லிக் கொண்டது.

கால்களை இன்னொரு தரம் தேய்த்துக்கொண்டு பறந்தது சின்னப் பூச்சி. பறந்தபடியே எல்லாவற்றையும் பார்த்து மகிழ்ந்தது. கீழே புல் பச்சைப்பசேல் என்று தளதளத்தது. புல்லில் மறைந்திருந்தது செக்கச் சிவந்த சின்னப் பூ.

''ஏய் சின்னப் பூச்சி, என் கிட்டே வாயேன்'' என்று கூப்பிட்டது சின்னப் பூ.

சின்னப் பூச்சி தரையில் இறங்கி, அப்பூச்செடி மேல் ஏறி, பூவின் இனிப்பான சாற்றைக் குடித்தது. முகத்தைத் தன் கால்களால் துடைத்துக்கொண்டே, ''நீதான் எவ்வளவு நல்லவன், சின்னப் பூவே!'' என்றது.

''நல்லதனத்துக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால், என்னால் நடக்க முடியவில்லையே'' என்று குறைப்பட்டுக் கொண்டது சின்னப் பூ.

''இருந்தாலும் நல்லது. அத்தோடு, எல்லாம் எனக்குச் சொந்தம்'' என்றது சின்னப் பூச்சி.

அது இப்படிச் சொல்லி முடிப்பதற்குள் மயிர் அடர்ந்த பெருந்தேனீ ஒன்று 'ஹொய்' என்று இரைந்து கொண்டே நேரே பூச்செடியை நோக்கிப் பறந்து வந்தது.

''யார் அது என்னுடைய பூச்செடியில் தொற்றிக்கொண்டிருப்பது? என்னுடைய இனிப்புச் சாற்றைக் குடிப்பது யார்? அட கேடு கெட்ட பூச்சியே, ஒழி இங்கிருந்து! போய்விடு, இல்லாவிட்டால் உன்னைக் கொட்டி விடுவேன்'' என்றது.

''அடடா, என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? எல்லாம், எனக்குச் சொந்தம் ஆயிற்றே'' என்று கீச்சிட்டது சின்னப் பூச்சி.

''இல்லை. இவை எல்லாம் எனக்கே சொந்தம்''

கோபக்காரப் பெருந்தேனீயிடம் அகப்படாமல் சிரமப்பட்டுத் தப்பித்தது சின்னப் பூச்சி. அது புல்மேல் உட்கார்ந்து பூச்சாற்றின் கறை பட்டிருந்த கால்களை நக்கித் துடைத்துக்கொண்டது. கூடவே அதற்கு எரிச்சல் உண்டாயிற்று.

''இந்தப் பெருந்தேனீ எவ்வளவு முரடு! ஆச்சரி யமாகக்கூட இருக்கிறது. அத்தோடு, என்னை கொட்டுவதற்கு வேறு ஏதோ ஒன்று வெயிலும் புல்லும் பூக்களும் எனக்கேதான் சொந்தம்'' என்று சொல்லிக் கொண்டதே யார் அது?

''ஆம் ஐயா, மன்னித்துக்கொள்ளுங்கள். மேற்கூறிய எல்லாம் எனக்கே சொந்தம்'' என்று சொல்லிற்று புல் தாள் மேல் ஊர்ந்த ஒரு கம்பளிப் புழு.

கம்பளிப் புழுவுக்குப் பறக்க முடியாது என்று கண்டு கொண்ட சின்னப் பூச்சி துணிச்சலோடு சொல்லிற்று; ''என்னை மன்னியும் புழுவாரே, நீர் சொல்வது தப்பு.. நீர் ஊர்வதை நான் தடுக்கவில்லை. ஆனால், என்னோடு வாதாட வரவேண்டாம்.

''சரி, சரி... என்னுடைய புல்லை மட்டும் தொடாமல் இரும். எனக்கு இது பிடிக்காது என்பதை மறைக்காமல் சொல்லி விடுகிறேன். உங்களைப் போல் பறப்பவர்கள். எல்லோரும் விளையாட்டுப் புத்தி உள்ளவர்கள். நானோ ஆழ்ந்த போக்கு உள்ள புழு.

சில மணி நேரத்தில் சின்னப் பூச்சி ஒன்றும் விடாமல் எல்லா விபரங்களையும் தெரிந்து கொண்டது. அதாவது, வெயிலையும் நீல ஆகாயத்தையும் பசும் புல்லையும் தவிரச் சிடுசிடுக்கும் பெருந்



தேனீக்களும் ஆழ்ந்த போக்குள்ள புழுக்களும் பூச்செடிகளில் பல வகை முட்களும் இருக்கின்றன. சுருங்கச் சொன்னால், அதற்கு நிரம்ப வருத்தம் உண்டாயிற்று. மனத்தாங்கல்கூட ஏற்பட்டது. எல்லாம் தனக்கே சொந்தம், தனக்காகவே படைக்கப்பட்டது என்று அது உறுதியாக எண்ணிக்கொண்டிருந்தது. இப்போது பார்த்தால் மற்றவையும் அப்படியே நினைத்துக் கொண்டிருக்கின்றன. இல்லை, இதில் ஏதோ தப்பு இருக்கிறது.... இந்த மாதிரி இருக்க முடியாது.

மேலே பறந்து போன சின்னப் பூச்சி தண்ணீரைக் கண்டது. ''இது என்னுடையதேதான்'' என்று சந்தோஷமாகக் கீச்சிட்டது. ''எனக்கே சொந்தமான தண்ணீர்.... ஆகா, எவ்வளவு இன்பம்! இங்கேயும் புல்லும் பூக்களும்கூட இருக்கின்றன'' சின்னப் பூச்சிக்கு எதிரே பறந்து வந்தன வேறு சின்னப் பூச்சிகள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் மாலா, வசந்தி, மாமி ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

වසන්ති: ආ... මාලා නංගි එන්න එන්න.
ஆ.... மாலா நங்கி என்ன என்ன.
வசந்தி: ஆ.... மாலா தங்கச்சி வாருங்கள் வாருங்கள்.

මාලා: කොහොමද අක්කේ? ඔයා ලස්සණවෙලා.
கொஹொமத அக்கே? ஒயா லஸ்ஸனவெலா.
மாலா: எப்படி இருக்கிறீர்கள் அக்கா? நீங்கள் அழகாகி விட்டீர்கள்.

වසන්ති: ඇත්තද? බොහෝම ස්තුතියි. නංගි වාඩිවෙන්න.
எத்தத? பொஹோம ஸ்தூதிய். நங்கி வாடிவென்ன.
வசந்தி: உண்மையாகவா? மிகவும் நன்றி. உட்காருங்கள் தங்கை.

නැන්දා: දුව, අම්මා ආවේ නැද්ද?
துவ, அம்மா ஆவே நெத்த?
மாமி: மகள், அம்மா வரவில்லையா?



මාලා: අම්මා හෙට එනව කිව්වා නැන්දේ.
அம்மா ஹெட எனவ கிவ்வா நெந்தே.
மாலா: அம்மா நாளைக்கு வருவதாகச் சொன்னார் மாமி.

මාලා: අක්කේ කවුද ඔයාගේ යාලු මනමාලියෝ?
அக்கே கவுத ஒயாகே யாலு மணமாலியோ?
மாலா: அக்கா உங்களுடைய பெண்தோழிகள் யார்?

වසන්ති: මගේම යාලුවෝ දෙන්නෙක්. ඔයා පොඩි වැඩියිනේ.
மகேம யாலுவோ தென்னெக். ஒயா பொடி வெடிய்னே.
வசந்தி: என்னுடைய தோழிகள் இரண்டு பேர். நீங்கள் மிகவும் சின்னவர்தானே.

මාලා: එයාලා සාරිද අඳින්නේ අක්කේ?
எயாலா சாரித அந்தின்னே அக்கே?
மாலா: அவர்கள் சாரியா அணிகின்றார்கள் அக்கா?



වසන්ති: ඔව් නංගි. සාරිය ලස්සනයිනේ.
ஒவ் நங்கி. சாரிய லஸ்ஸனய்னே.
வசந்தி: ஆம் தங்கை. சாரி அழகானதுதானே.

මාලා: අක්කේ මොනවහරි වැඩක් තියෙනවනම් කියන්න. මම කරලා දෙන්නම්.
அக்கே மொனவஹரி வெடக் தியெனவநம் கியன்ன. மம கறலா தென்னம்.
மாலா: அக்கா ஏதாவது வேலை இருந்தால் கூறுங்கள். நான் செய்து தருகிறேன்.

වසන්ති: අපි තේ බොමුකෝ නංගි.
அபி தே பொமுகோ நங்கி.
வசந்தி: நாங்கள் தேநீர் குடிப்போமே தங்கை.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* அக்கா உங்களுடைய பெண்தோழிகள் யார்?
අක්කේ කවුද ඔයාගේ යාලු මනමාලියෝ?

i. அவர்கள் சாரியா அணிகின்றார்கள் அக்கா?
..........................................................................

ii. ஏதாவது வேலை இருந்தால் கூறுங்கள்.
..........................................................................

iii. நாங்கள் தேநீர் குடிப்போமே தங்கை.
..........................................................................






நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களில் (Present Perfect Tense) காணப்படுகின்ற வினா வாக்கியம், உடன்பாடு வாக்கியம் மற்றும் எதிர்மறை வாக்கியம் முதலானவற்றை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Have you posted that letter?
நீ அந்தக் கடிதத்தை தபால் செய்துவிட்டாயா?
(வினா வாக்கியம் - Interrogative)

(ஆ) Yes, I have already posted that letter.
ஆம், நான் அந்தக் கடிதத்தை ஏற்கனவே தபால் செய்துவிட்டேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(இ) No, I have not posted it yet.
இல்லை, நான் அதனை இன்னும் தபால் செய்துவிடவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(ஈ) Have you seen this girl before?
நீ இந்தச் சிறுமியை முன்னர் பார்த்துள்ளாயா?
(வினா வாக்கியம் - Interrogative)

(உ) Yes, I have seen this girl before.
ஆம், நான் இந்தச் சிறுமியை முன்னர் பார்த்துள்ளேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஊ) No, I have not seen this girl before.
இல்லை, நான் இந்தச் சிறுமியை முன்னர் பார்த்திருக்கவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(எ) No, I have never seen this girl.
இல்லை, நான் இந்தச் சிறுமியை ஒருபொழுதும் பார்த்திருக்கவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(ஏ) Has he written that letter?
அவன் அந்தக் கடிதத்தை எழுதிவிட்டானா?
(வினா வாக்கியம் - Interrogative)

(ஐ) Yes, he has written that letter.
ஆம், அவன் அந்தக் கடிதத்தை எழுதிவிட்டான்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative).

(ஒ) No, he has not written that letter yet.
இல்லை, அவன் அந்தக் கடிதத்தை இன்னும் எழுதிவிடவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(அ) Has she decided to go abroad?
அவள் வெளிநாடு செல்லத் தீர்மானித்துவிட்டாளா?
(வினா வாக்கியம் - Interrogative)

(ஆ) Yes, she has decided to go abroad.
ஆம், அவள் வெளிநாடு செல்லத் தீர்மானித்துவிட்டாள்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(இ) No, she has not yet decided to go abroad.
இல்லை, அவள் வெளிநாடு செல்ல இன்னும் தீர்மானித்துவிடவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(ஈ) Where is the cat?
அந்தப் பூனை எங்கே?
(இது நிகழ்கால தனி வாக்கியம் ஆகும்)

(உ) It has run into the garden.
அது தோட்டத்துக்குள் ஓடிவிட்டது.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நோயினால் ஹெய்ட்டியில் பலர் மரணம்

ஹெய்ட்டி நாட்டின் மத்திய பகுதியில் விரைவாகப் பரவி வருகின்ற ஒருவகைத் தொற்று நோயினால் நூற்றுக்கணக்கானோர் மரணமடைந்திருப்பதாகவும் ஆயிரக்கணக்கானோர் இந்நோயினால்



பாதிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாந்திபேதியை ஒத்திருப்பதாக கருதப்படுகின்ற இந்த தொற்றுக்கு ஆளாகியவர்கள் வயிற்றுப்போக்கு, காய்ச்சல், வாந்தி போன்ற பாதிப்புக்களுக்கு ஆளாகியுள்ளனர்.

அசுத்தமான நீர், சுத்தம் பேணப்படாத உணவுகள் ஆகியன ஊடாகவே இத்தொற்று நோய்க்குரிய பக்றீரியா உடலினுள் சென்று குடலைப் பாதிப்பதாக மருத்துவவட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இள வயதினர் தொடக்கம் வயோதிபர் வரை என அனைவரையும் இந்த தொற்றுநோய் பாதித்து வருவதுடன், இடநெருக்கடியினால் மருத்துவமனைகள் நிரம்பி வழிவதாகவும் இதனால், வெளியிடங்களில் வைத்தும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஜனவரி ஹெய்ட்டில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களினால் இந்தத் தொற்று நோய் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## தெரிந்து கொள்வோம்



✱ அட்லஸ் மலைகள் காணப்படுகின்ற நாடு எது?
**ஆபிரிக்கா**



✱ இந்தியாவில் தங்கச் சுரங்கம் உள்ள ஒரே மாநிலம்?
**கர்நாடக மாநிலம்**



✱ லூஸோ மற்றும் அஸ்வான் நகரங்கள் எந்த நதிக்கு அருகே காணப்படுகின்றன?
**நைல் நதிக்கு அருகே**



✱ நியூயோர்க் நகரத்திற்கு அருகாமையிலுள்ள நதி எது?
**ஹட்சன் நதி**



✱ உலகின் விசாலமான பாலைவனத்தின் பெயர் என்ன? அது எங்குள்ளது?
**சஹாரா, வட ஆபிரிக்கா**



✱ மகாவலி கங்கையின் நீளம் (கி.மீ) எவ்வளவு?
**330 கி.மீ**



✱ எவரெஸ்ட் மலையில் கால் பதித்த முதல் பெண்மணி யார்?
**ஜன்கோ டுபெய்**

✱ ஆப்கானிஸ்தானின் தலைநகரம்?
**காபுல்**



✱ நெதர்லாந்தின் தலைநகரம்?
**ஆம்ஸ்ட்டர்டாம்**

✱ திமிங்கிலம் குட்டி ஈனும்போது குட்டியின் எந்தப் பகுதி முதலில் வெளியே தெரியும்?
**வால் பகுதி**



✱ பென்ஸிலினைக் கண்டுபிடித்தவர் யார்?
**அலெக்ஸாண்டர் ஃபிளெமின்**



✱ கப்பல் கடலில் மூழ்குவதை இனங்காட்டுவதற்கு அடையாளமாக கப்பலில் இடப்பட்டிருக்கும் ரேகை என்ன பெயரில் அழைக்கப்படுகின்றது?
**பிரிம்ஸோல் ரேகை**



✱ இன்சுலின் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
**பென்டின் (கெனடா)**



✱ நீண்ட ஆயுள் காலத்தைக்கொண்ட உயிரினமாக கருதப்படுவது?
**கடல் ஆமை**

✱ வெள்ளிக்கோளில் பரவலாகக் காணப்படுகின்ற வாயு எது?
**காபண்டயொக்சைட்**



✱ 1935 ஆம் ஆண்டில் இத்தாலியின் சர்வாதிகாரத் தலைவராக இருந்த முசோலினியினால் ஆக்கிரமிக்கப்பட்ட ஆபிரிக்க நாடு எது?
**எதியோப்பியா**

✱ ஜப்பானியர்களால் சிங்கப்பூர் எத்தனையாம் ஆண்டில் கைப்பற்றப்பட்டது?
**1942 இல்**

✱ ரஷ்யப் புரட்சி எத்தனையாம் ஆண்டில் ஏற்பட்டது?
**1917 இல்**

✱ இங்கிலாந்தில் தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட்ட வருடம்?
**1760**

✱ முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமான திகதி?
**1914 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 3 இல்**

# பிரான்ஸில் ஓய்வூதிய மாற்றத்திற்கு எதிர்ப்பு




பிரான்ஸ் நாட்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள ஓய்வூதிய சீர்திருத்த முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. என்றாலும் தனது இந்த சீர்திருத்த திட்டத்தில் மாற்றம் இருக்காது என்று ஜனாதிபதி சார்க்கோஷி தெரிவித்துள்ளார். ஓய்வுபெறும் வயதை 60 இலிருந்து 62 வரையிலும் முழுமையான ஓய்வு வயதை 65 வயதிலிருந்து 67 வயது வரையிலும் என்று மாற்றியமைப்பதற்கு பிரான்ஸ் அரசாங்கம் திட்டமிட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜீ-20 நாடுகளின் உச்சி மாநாடு



ஜீ-20 அமைப்பில் அங்கம் வகிக்கின்ற நாடுகளைச் சேர்ந்த நிதியமைச்சர்களின் சந்திப்பொன்று கடந்த வாரம் தென்கொரியாவில் நடைபெற்றது.

நொவெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி-20 நாடுகளின் தலைவர்களது உச்சி மாநாட்டையொட்டியே இந்த முன்னோடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

அண்மைக்காலமாக, நாணயக் கொடுக்கல் வாங்கல் வீதத்தில் பல சர்ச்சை ஏற்பட்டிருந்தமையால் அதுகுறித்த விடயங்களே மேற்படி நிதியமைச்சர்களின் மாநாட்டில் பேசப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

சீனாவின் நாணயமான யுவானின் பெறுமதி விடயத்தில் சீனாவிற்கும் மேற்கு நாடுகளுக்குமிடையே பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அவ்வாறே, நாணயப் பெறுமதி அதிகரிப்பினால் வளர்முக நாடுகள் தாம் பின்னடைவுகளுக்கு ஆளாவோம் என்று தெரிவித்து வருகின்றன. எனவே, இந்த சர்ச்சைகளுக்கு ஒருமுகமான தீர்வினை காணும் பொருட்டே, இம்முறை ஜீ-20 மாநாடு நடத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

**அற்லஸ் கேள்வி - 280**

**கேள்வி:** ஜீ-20 நாடுகளின் நிதி அமைச்சர்களது மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றுள்ளது?

**சரியான விடை..............................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 280,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 278 இன் சரியான விடை: 68 நாட்கள்**

**பரிசு பெறுவோர்**

எம்.மஹ்தி,
101/19, டீன்ஸ் வீதி, மருதமுனை.

எம்.ஏ.முஹம்மத்,
20, வெள்ளவத்தை வீதி,
வெலிப்பிட்டிய, வெலிகம.

தி.பிரலக்ஷி,
42/3A, நேர்ஸிங் ஹோம் வீதி,
ஹட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊசலாடும் மஞ்சுவின் தங்கப் பதக்கம்!



இந்தியாவில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுக்களில் இலங்கையின் சார்பாக குத்துச்சண்டைப் போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கத்தை வென்ற மஞ்சு வன்னியாராச்சி மீது ஊக்கமருந்துப் பாவனைக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளபோதிலும் உரிய மருத்துவ அறிக்கைகள் வரும் வரை அவர்மீது எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

மஞ்சு வன்னியாராச்சி ஊக்க மருந்தைப் பாவித்தே போட்டியில் கலந்து கொண்டார் என்று தேசிய ஒலிம்பிக் சங்கம் சந்தேகம் வெளியிட்டிருந்ததுடன், இதுகுறித்து 14 நாட்களுக்குள் விளக்கமளிக்குமாறு மஞ்சுவிடம் கேட்டுக்கொண்டுள்ளது. மஞ்சுவின் சிறுநீர் பரிசோதனையின்போதே அவர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பாவித்திருப்பது தெரிய வந்திருப்பதாகவும் ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள மஞ்சு, ஆஸ்த்துமா நோய்க்காக தான் பாவித்த மருந்துகளே இவ்வாறு தவறாக ஊக்க மருந்தாகக் கருதப்படுவதாக குறிப்பிட்டுள்ள அவர் இரண்டாம் கட்ட சிறுநீர் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே, இரண்டாம் கட்ட பரிசோதனை அறிக்கை வரும்வரை மஞ்சுவின் தங்கப்பதக்கத்தை தேசிய ஒலிம்பிக் குழு தம்வசம் பெற்றுக்கொண்டுள்ளது.

# நியூஸிலாந்து-இந்தியா போட்டிகள்: ரசிகர்கள் ஏமாற்றத்தில்...





இந்த மாதம் (நொவெம்பர்) இந்தியா, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் முதல்நிலை வீரர்கள் பலர் விளையாட மாட்டார்கள் என்பதையிட்டு இந்திய ரசிகர்கள் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவுடன் நடைபெற்ற தொடர்களிலும் இந்திய முன்னணி வீரர்கள் விளையாடதிருந்த நிலையில் தற்போது நியூஸிலாந்துடனான போட்டியிலும் முக்கிய வீரர்கள் இல்லாதிருப்பது தம்மை ஏமாற்றத்திற்குள்ளாக்கிருப்பதாக ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர். இதனால், அரங்கங்களில் ரசிகர்களின் வரவும் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் கருதப்படுகின்றது.

நொவெம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 10 ஆம் திகதி வரை நியூஸிலாந்து, இந்தியா அணிகளுக்கிடையே 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்கா செல்லவுள்ள இந்திய அணி அங்கு 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளிலும் 20/20 போட்டியிலும் விளையாடவுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளைக் கருத்தில்கொண்டு நியூஸிலாந்துடனான போட்டியில் முன்னணி வீரர்கள் இடம்பெறவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதுவரை தென்னாபிரிக்காவில் இந்திய அணி ஒரு தடவைகூட டெஸ்ட் தொடரை கைப்பற்றாததால் அதனை இம்முறை சாதிக்க வேண்டும் என்பதற்காகவே தென்னாபிரிக்க போட்டிக்கு இந்திய தேர்வுக்குழு முக்கியத்துவத்தை அளித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.



# மேல் மாகாண பெட்மின்டன் போட்டிகள்

மேல் மாகாண பெட்மின்டன் சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற பெட்மின்டன் போட்டிகள் நொவெம்பர் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் புனித தோமஸ் உள்ளக அரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாணத்தைப் பிறப்பிடமாகவோ,வதி[illegible]மாகவோ கொண்ட போட்டியாளர்களே இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.ஆடவர், மகளிர் என இரண்டு பிரிவுகளிலும் போட்டிகள் நடைபெறும். வெற்றியீட்டுவோருக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள், பரிசுப் பொதிகள் ஆகியனவும் வழங்கப்படும்.



# செரினா வில்லியம்ஸ் காயத்தினால் விலகினார்

இந்த வருடத்தின் இறுதி பருவத்தில் நடைபெறவுள்ள டென்னிஸ் போட்டிகளில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் செரினா வில்லியம்ஸின் காலில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக, அன்றிலிருந்து எந்தவொரு போட்டியிலும் அவர் கலந்து கொள்ளவில்லை.

இருப்பினும், காயத்திற்கு மருத்துவ சிகிச்சை பெற்ற பின்னர் மீண்டும் போட்டிகளில் ஈடுபடும் நோக்கத்தில் பயிற்சிகளில் ஈடுபட்ட போது காலில் மீண்டும் பாதிப்பு ஏற்பட்டதால் விளையாட முடியாத நிலைக்கு அவர் ஆளாகியுள்ளார்.

எனவேதான், அவர் எதிர்வரும் சில மாதங்களுக்கு போட்டிகளில் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, டோஹா சர்வதேச மகளிர் டென்னிஸ் செம்பியன் கிண்ணப் போட்டிகள் மற்றும் இத்தாலியுடனான 'பெட்' கிண்ண இறுதிப் போட்டிகள் ஆகியவற்றை செரினா வில்லியம்ஸ் இழக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரொனால்டினோ மீண்டும் பிரேஸில் அணியில்



இந்த வருடம் நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின்போது பிரேஸில் அணியில் இடம்பெறத் தவறிய ரொனால்டினோ மீண்டும் அந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்படக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த உலகக் கிண்ண போட்டிகளின்போது அணியின் பயிற்றுனரினாலேயே ரொனால்டினோ அணியிலிருந்து விலக்கப்பட்டிருந்தார். ஆயினும், அப்போட்டிகளில் அணியை வெற்றிப்பாதைக்குக் கொண்டு செல்வதற்கு பயிற்றுனர் தவறிவிட்டார்.

இதேவேளை, தற்போதைய புதிய பயிற்றுனரின்கீழ் பிரேஸில் அணி வெற்றிப்பாதையில் சென்றுகொண்டிருப்பதனாலும் சர்ச்சைக்குரிய பயிற்றுனர் தற்போது இல்லாததாலும் ரொனால்டினோ மீண்டும் அணியில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, கழக மட்டத்திலான போட்டிகளிலும் ரொனால்டினோ சிறப்பாக விளையாடி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகளை நடத்துவதற்கு கோரிக்கை





பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளை நடத்துவதற்கான முயற்சிகளில் அந்நாட்டின் கிரிக்கெட் சபை இறங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தையடுத்தே, எந்தவொரு சர்வதேச மட்டத்திலான போட்டியும் பாகிஸ்தானில் நடத்தப்படவில்லை. அவ்வாறே, அடுத்த உலகக் கிண்ணப்போட்டிகளை நடத்தும் நாடுகள் பட்டியலிலிருந்தும் பாகிஸ்தான் நீக்கப்பட்டது.

இதன் காரணமாக, பாகிஸ்தானில் கிரிக்கெட் துறை பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. எனவே, இதனை சீர்படுத்த பாகிஸ்தானில் சர்வதேச மட்டத்திலான கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்ற அவசியத்தன்மை எழுந்தள்ளது. எனவேதான், இது தொடர்பான முயற்சிகளில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இறங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனைச் சந்திக்க நாஸா தயார்




பிரபஞ்சம் குறித்த மனிதனின் தேடலில் அவன் பல கட்டங்களைத் தாண்டி, பல வெற்றிகளையும் கண்டுள்ளான். அந்த வெற்றிக் களிப்போடு விண்வெளி ஆய்விலும் விண்வெளிப் பயணத்திலும் மாத்திரம் அவன் திருப்தி அடையவில்லை. மேலும், முயற்சி செய்து இறுதியில் சந்திரனைச் சந்திப்பதிலும் அதில் காலடி வைப்பதிலும் சாதனை புரிந்தான். அதனைத் தொடர்ந்து அண்மைக் காலமாக, செவ்வாய்க் கிரகத்திற்கும் பல ஆய்வுக்கலங்களை அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்வதிலும் வெற்றி கண்டான்.


இதேவேளை, ஞாயிற்றுத் தொகுதியில் மிகத் தொலைவுக்கு விண்கலங்களை அனுப்புவதில் வெற்றி கண்டுள்ள அமெரிக்க நாஸா நிறுவனமானது, மனித வரலாற்றில் மற்றொரு புரட்சியை ஏற்படுத்தும் வகையில் சூரியனைச் சந்திக்கவும் தயாராகி வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எத்தகைய கோள்களைச் சந்திக்கக் கூடியதாக இருந்தாலும், ஞாயிற்றுத்தொகுதியின் சூரியனை நோக்கிச் செல்வதென்றால் அது மிகவும் கடினமானதொரு விடயம். 1400° செல்சியஸ் வெப்பநிலையும் ஒவ்வொரு வினாடியும் தீப்பற்றும் இயல்பையும்கொண்ட இந்த சூரியனை சென்றடைவதை விடுத்து, அதன் அருகில் செல்வதுகூட கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விடயமாகும்.

எனினும், நாஸா நிறுவனமானது 'Solar Probe Plus' எனும் ஆய்வுப் பயணமொன்றை விரைவில் மேற்கொள்ள ஆயத்தமாகி வருகின்றது. மேற்படி ஆய்வுக்கான விண்கலம் 2018 ஆம் ஆண்டு பூமியிலிருந்து புறப்பட்டுச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்காக சாதாரணமாக ஒரு காரின் அளவிலான விண்கலமொன்றை சூரியனுக்கு 4 மில்லியன் மைல் தூரத்திலிருந்து சூரியனை நோக்கி விடுவிக்க நாஸா திட்டமிட்டுள்ளது. இக்கலமானது சூரியனின் நிலையான இடத்தைக் கடக்கும்பொழுது, அதிலுள்ள உபகரணத்தின் மூலம் சூரியனை பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




நாஸா நிறுவனத் தலைமையகத்தின் விஞ்ஞானியான லைக்கா குஹாத குர்டா இது பற்றிக் குறிப்பிடும்போது; ''சூரியனானது பல்வேறு ரகசியங்களை தன்னுள் மறைத்து வைத்திருக்கும் அற்புதமானதொரு நட்சத்திரமாகும். இந்த ரகசியங்களில் சூரியனின் அமைவிடத்தைவிட, அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் அதிக வெப்பம் நிலவலாம் என்ற எதிர்பார்ப்பும் புவி உள்ளிட்ட முழு ஞாயிற்றுத் தொகுதியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் சூரியக் காற்று (Solar wind) முன்னோக்கித் தள்ளுவது எவ்வாறு? என்பன குறிப்பிடத்தக்கவை'' என்றார்.

சூரியன் பற்றிய இந்த ஆய்வுக்காகத் தயாரிக்கப்படவுள்ள குறித்த விண்கலத்தை நீண்ட காலம் கடும் வெப்பத்தில் இருந்து பாதுகாப்பதற்கு அல்லது தாக்குப்பிடிப்பதற்கு ஏற்ற வகையில் அமைக்க விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். மேலும், இதுவரை எடுக்கப்பட்டுள்ள சூரியனின் படங்கள் அனைத்தையும்விட, மிக அருகில் சென்று எடுக்கப்பட்ட சூரியனின் படங்களை இந்த உத்தேச விண்கலத்தின் மூலம் எமக்குப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இவ் விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள மிகச் சக்தி வாய்ந்த நவீன தொலைக்காட்டி மூலம் சூரியனின் சகல வேறுபாடுகளையும் மிக அருகில் இருப்பது போன்று அவதானித்து தகவல்களைப் பெற முடியும். அத்துடன், சூரியனின் ஈர்ப்புச் சக்தி, அதன் காற்று, அசைவு, நடுக்கம், முகில்கள், வெடிப்பு,மின், தூசுகள், அதிர்வுச் சுருக்கம், மடிப்புகள் என அனைத்து விடயங்களையும் இந்த விண்கலத்தின் தொலைக்காட்டியூடாக அவதானிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# இரட்டையர் விண்வெளியில் சந்திக்கவுள்ளனர்



அமெரிக்காவின் நியூ ஜேர்சி மாநிலத்தைச் சேர்ந்த இரட்டை சகோதரர்களான ஸ்கொட் கெலி, மார்க் கெலி ஆகிய இருவரும் விண்வெளியில் முதன்முதலாக சந்தித்துக்கொள்ள உள்ளனர்.

வெவ்வேறு கல்லூரிகளில் கல்வி கற்ற இவர்கள் தமது பள்ளிப்படிப்பை அடுத்து விமானப்படையில் விமானிகளாக சேர்ந்தனர். இருவரும் தமது பணியில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர். இதனால், 1996 ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி மையமான நாஸா, இவர்கள் இருவரையும் தேர்வு செய்து விண்வெளிப் பயிற்சி அளித்து வந்தது.



அதன் பெறுபேறாக, ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் மூலம் கடந்த செப்டெம்பர் மாத இறுதியில் ஸ்கொட் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்றார். இவர் அங்கு சுமார் 5 மாதங்களுக்கு மேல் தங்கியிருந்து ஆய்வுப் பணியில் ஈடுபடவுள்ளார். இதேவேளை, ஸ்கொட்டின் சகோதரரான மார்க் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நாஸாவின் எண்டீவர் விண்கலத்தின் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் செல்லவுள்ளார். ஆக, இந்த இரட்டை சகோதரர்கள் முதல்முறையாக விண்வெளியில் சந்தித்துக்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, தந்தை-மகன் மற்றும் கணவன்-மனைவி ஆகியோர் விண்வெளியில் சந்தித்துக்கொண்ட சம்பவங்கள் வரலாற்றில் பதிவாகியுள்ளன. ஆனால், சகோதரர்கள் சந்தித்துக்கொள்ளும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இதுகுறித்து ஸ்கொட் கருத்துத் தெரிவிக்கையில்; ''விண்வெளியில் மிதப்பது மறக்க முடியாத அனுபவம். அதிலும் சகோதரனுடன் சேர்ந்து மிதப்பது கேக் மேல் இருக்கும் ஐஸ்கிறீம் போன்று மிகவும் இனிமையான அனுபவம்'' என்றார்.

# விண்வெளியில் எப்படி நடக்கிறார்கள்?



விண்வெளி வீரர்கள் விண்வெளியில் எப்படி நடக்கிறார்கள் என்று தெரியுமா? சாதாரணமாக, நாம் நடப்பதற்கு மூளை மிகவும் உதவுகிறது. நமது தசைகள், காதுகள், கண்கள் ஆகியவை நம்மைச் சுற்றி நடக்கும் தகவல்களைச் சேகரித்து உடனுக்குடன் மூளைக்கு அனுப்புகின்றன. மூளை அதற்கேற்ப உடலின் பல பகுதிகளுக்கும் கட்டளைகளை அனுப்பி நாம் சமநிலையில் நடப்பதற்கு உதவுகிறது.

ஆனால், விண்வெளியில் நடப்பதானது, சாதாரணமான விடயமன்று. அதற்கென, கடுமையான பல பயிற்சிகளில் விண்வெளி வீரர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். முதலில், சுழலும் நாற்காலி ஒன்றில் அவர்களை அமரவைத்து 10 நிமிடங்கள் சுழல விட்டுப் பின்னர், அதிலிருந்து இறக்கிவிட்டு மேடையில் மெதுவாக நிற்கச் செய்வார்கள். அவ்வாறு செய்யும்போது, உடனடியாக நிற்க முடியாத நிலை காணப்படும். ஆனால், தொடர்ந்து பயிற்சிகளை மேற்கொள்ளும்போது, மூளை அதற்கேற்ப கட்டளைகளை இடுகின்றது. இதுபோன்ற பயிற்சிகளைப் பெற்றபின் விண்வெளி வீரர்களுக்கு விண்வெளியில் நடப்பது சுலபமான விடயமாகின்றது.



இந்தப் பயிற்சிகளின் பின்னர், விண்வெளி வீரர்கள் விண்வெளிக்குச் சென்று அங்கே நடந்துவிட்டுப் பூமிக்குத் திரும்பும்போது, அவர்கள் பூமியில் நடக்கச் சிரமப்படுவார்கள். தலைவலி, உடல்நலம் பாதிக்கப்படுதல், தள்ளாட்டம் போன்ற பிரச்சினைகளுக்கு ஆளாவார்கள். சில நாட்கள் கழித்துத்தான் இந்த நிலைமைகளிலிருந்து விடுபட்டு அவர்களால் இயல்பு நிலைக்கு வரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்

**மா**ணவர்களிடையே மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொண்டு வர ஊன்றுகோலாக 'விஜய்' பத்திரிகை திகழ்கின்றது. அத்துடன், எமக்கு நன்மை பயக்கும் பல விடயங்களை சுமந்து வந்து அனைவரினதும் அறிவுப் பசியைப் போக்குகின்றது. 'விஜய்' பத்திரிகைக்கு எமது மனமார்ந்த நன்றிகளுடன் மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

**-க/விக்னேஸ்வரா த.ம.வித்., பன்விலை.**

**வி**ஜய்யே! இவ்வாரம் நீ தாங்கி வந்த 'வாரம் ஒரு நாடு', 'ஒல்லாந்தர் வரலாறு', 'அனர்த்தங்கள் அற்ற எதிர்காலம்', 'விண்வெளித் தகவல்கள்', 'விளையாட்டுத் தகவல்கள்' என்பன என் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன. உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

**-த.சஞ்ஜீவன், நாவலர் த.ம.வித்., நானுஓயா.**



**'அ**னர்த்தங்கள் அற்ற எதிர்காலம்', 'சுரங்கப் பணியாளர்கள் மீட்பு', 'ஐக்கிய நாடுகள் சபை' போன்றவை என்னை மிகவும் கவர்ந்தன. அனைத்து விடயங்களையும் ஒரே பத்திரிகையில் சுமந்து வரும் விஜய்க்கு மிக்க நன்றி.

**-எம்.அன்ஃபாஸ், மாளிகாஹேன மு.ம.வித்., பேருவளை.**



**ஒ**வ்வொரு வாரமும் நீ எம்மை அறிவுசார் உலகினுள் நுழைய வைக்கின்றாய். 'இராமாயணம்', 'சங்கிலி மன்னன் வரலாறு', 'வாரம் ஒரு நாடு', விண்வெளித் தகவல்கள்' போன்ற தொடர் அம்சங்களும் ஏனைய ஆக்கங்களும் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. அதிசயத் தகவல்களுடன் எம்மைத் தீண்டும் அரிய நூலகமாய் உள்ள நீ, பல்லாண்டு காலம் நிலைத்திருக்க வாழ்த்துகிறேன்.

**-எம்.பஸ்னா, தரம்-9^A^, மதவாக்குளம் மு.ம.வித்., மதவாக்குளம்.**

**வ**ரலாறு, பொது அறிவு, விளையாட்டு, உலக அறிவு, போட்டிகள், கதைகள், விண்வெளித் தகவல்கள், சுய ஆக்கங்கள் என பல்வேறு துறைசார்ந்த விடயங்களை அள்ளி வரும் உன்னைப் போற்றி மகிழ்கின்றேன்.

**-த.விஜயலட்சுமி, தரம்-10^R^, சௌதம் த.ம.வித்., தெமோதரை.**

**'ஐ**க்கிய நாடுகள் சபை' ஆக்கத்தினூடாக, அச்சபை தொடர்பான பரந்த அறிவினையும் தகவல்களையும் பெற்றுக்கொண்டேன்.

'அனர்த்தங்கள் அற்ற எதிர்காலம்' எனும் கட்டுரை அனர்த்தங்களிலிருந்து தற்காத்துக்கொள்ள சிறப்பாக வழிகாட்டியது. 'ஒலுவில் துறைமுகம்' கிழக்கிற்கு மட்டுமன்றி முழு இலங்கைக்கும் ஒளியைப் பரப்பும் என்பது நிச்சயம்.

**-வி.கனகரட்ணம், மில்லகந்த.**

**'பி**ரபலங்கள் சிலரின் வாழ்க்கை முடிவுகள்' ஆச்சரியப்பட வைத்தது. எவ்வளவு பெரிய அந்தஸ்தில் இருந்தாலும் மரணம் எந்நேரமும் எப்படியும் நிகழலாம் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு. உன்னில் நல்லறிவுரைகளை வழங்கும் அம்சங்களையும் இயன்றளவில் சேர்த்துக்கொள்ளவும்.

**-சொ.பபிதா, பேஸ்லைன் வீதி, கொழும்பு-09.**

**மு**தல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை முகம் சுளிக்காமல் வாசிக்கக்கூடிய தகவல்கள் உன்னில் பொதிந்துள்ளன. தொடர்ச்சியாக வெளிவரும் அம்சங்களுட்பட 'ஐக்கிய நாடுகள் சபை','மகாத்மாவின் பொறுமை', 'ஒலுவில் துறைமுகம்', 'அனர்த்தங்கள் அற்ற எதிர்காலம்', 'மைக்ரோசொஃப்ட் வர்த்தக குறியீட்டு மாற்றங்கள்' என ஒவ்வொரு ஆக்கமும் உன் தனித்துவத்தைப் பிரதிபலிக்கின்றது.


**-ஸீனியா ஹனான், மட்டமகொட, கன்னத்தொட.**

**இந்த இதழில் (03.11.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 10.11.2010.**


**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

## 1 கீழுள்ள வினாக்களுக்கு விடையளித்து, படத்திற்கு நிறந்தீட்டுக

1. பழக்கூடையில் எத்தனை அப்பிள்கள் உள்ளன? ..............................
2. எத்தனை வாழைப்பழங்கள் உள்ளன? ..............................
3. எத்தனை திராட்சைப்பழங்கள் உள்ளன? ..............................
4. எத்தனை பெயார்ஸ்கள் உள்ளன? ..............................
5. எத்தனை தோடம்பழங்கள் உள்ளன? ..............................



## 2 உரிய நிழற்படத்துடன் இணைக்க



## 4 பொருத்தமான எழுத்துக்களைக்கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

1. அ......ச....... (ன்/ஞ்/ல்/ள்)
2. பு...... ...... ம் (ரா/வா/ன/ண)
3. நொ......க்குத் தீ....... (ரு/று/னி/நி)
4. சூ ...... நி...... (ழ்/ள்/லை/ளை)

## 3 குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து எழுதுக

| | |
|---|---|
| eheps ______ | cudk ______ |
| osertor ______ | woc ______ |
| gip ______ | rehos ______ |
| atog ______ | nichkec ______ |




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.11.10 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 285**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## 5 சரியான விடையின்கீழ்க் கோடிடுக

1. புலி-உறுமும் என்பது போல குதிரை (கத்தும்/கனைக்கும்)
2. கிளி-பேசும் என்பது போல கோழி (கூவும்/கொக்கரிக்கும்)
3. பாம்பு-சீறும் என்பது போல பல்லி (சொல்லும்/இரையும்)
4. மயில்-அகவும் என்பது போல ஆந்தை (முக்காரமிடும்/அலறும்)

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 282 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஜெனிபர் மனீஷா, 56, உனம்புவ வீதி, கம்பளை.

**போட்டி: 02**
எஃப்.ஸப்னா,
9/6, சமன்புர, தானிய கிராமம்,திருகோணமலை.

**போட்டி: 03**
இக்ரம் ரஹீம்டீன்,
66, ஹரிசன் ஜோன்ஸ் வீதி, மாத்தளை.

**போட்டி: 04**
சு.நிலக்ஷிகா, ஏழாலை கிழக்கு, ஏழாலை.

**போட்டி: 05**
எம்.பஸ்மி, 234, அம்பகஹலந்த, தெல்தெனிய.

**பாராட்டுப் பெறுவோர்:**


- வி.அருண் குமரன், பூண்டுலோயா.
- எம்.இன்சாஃப், கொழும்பு 02.
- ஸகியா சனூசி, அக்குறனை.
- ஜெ.நந்தகுமார், வேப்பங்குளம்.
- கை.றொஹான், கொழும்பு-15.
- எச்.அஜ்வாத், மாவனல்லை.
- ரா.உஷாந்தினி, புத்தூர்.
- எம்.ரக்ஷானா, பேருவளை.
- விக்னேஸ்வரன், தெஹிவளை.
- எம்.ஹம்ஜாத், மாத்தறை.

## அறிவுக்கு விருந்து 282 விடைகள்

**போட்டி: 02**



**போட்டி: 03**



**போட்டி: 04**

| (A) | (B) |
|---|---|
| 1. தேங்காய் - coconut | 1. carpenter - தச்சன் |
| 2. பேனா - pen | 2. forest - காடு |
| 3. கைக்குட்டை - handkerchief | 3. lake - ஏரி |
| 4. அலுமாரி - almirah | 4. kite - பட்டம் |

**போட்டி: 04**

1. பாலூட்டி வகையைச் சேர்ந்த ஒரே பறவை வெளவால்.
2. மனிதனைவிட ஆந்தையின் பார்வைத்திறன் 82 மடங்கு கூர்மையானது.
3. உலகின் மிகத் தாழ்ந்த பகுதி சாக்கடல்.
4. உலகின் மிகப் பெரிய தீபகற்பம் இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 19

அரியாலையூர் சி.சிவதாசன்

நல்லூரில் போருக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகையில் அமைச்சர்களான அப்பாமுதலியும் பரநிருபசிங்கனும் இங்கு நடக்கும் ஏற்பாடுகள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் அப்படியே அந்தப் பறங்கியருக்கு காக்கைவன்னியன் மூலம் தெரியப்படுத்திக்கொண்டிருந்தனர். போர்த்துக்கேயர்கள் தளபதி பிரகன்சா தலைமையில் கப்பலேறி பூநகரிக் கடல் பகுதியில் நங்கூரமிட்டு படகுகளில் கொழும்புத்துறை துறைமுகத்தில் வந்திறங்கினர். இதைக் கேள்வியுற்றுக் கோபங்கொண்ட சங்கிலி மன்னன் படைத்தளபதி இமயனாரை அழைத்து பறங்கியர் கூட்டத்தை விரட்டி அடிக்கப் படையினரைத் தயார்ப்படுத்துமாறு உத்தரவிட்டான். அத்துடன், போர்க்கவசம் பூண்டு பரிவாரங்கள் சூழ அன்னை வீரமகாளியின் வேண்டுதலுக்காக அவள் ஆலயம் நோக்கிப் புறப்பட்டான்.

"அன்னை வீரமகாகாளி! எங்கும் நிறைந்து, எதையும் அசைவித்து, அல்லல் களையும் எங்கள் குல தெய்வமே! பாலகன் முருகனுக்கு வேல் கொடுத்தவளே! எதுவும் அறியாத காளிதாசனைப் பாட வைத்தவளே! திருவாகி எங்கள் செயலாகி, வீரத் தெய்வமாய் அருகிருந்து காப்பவளே! பெருவாழ்வு நல்கும் பெருமாட்டி! எங்கள் உணர்வெல்லாம் அலை அலையாய் எழுந்து நிற்பவளே! கேட்ட வரமீயும் காளி அம்மா! எடுத்த வேல் எதிரியின் மார்பைத் துளைத்து எங்கள் வெற்றியை நிலைநாட்ட வரம் அருள்வாய் அம்மா!" என வேண்டினான் மன்னன் சங்கிலி. பின்னர் கைலாயப் பிள்ளையார் ஆலயத்திற்கும் நல்லூர் கந்தசாமி ஆலயத்திற்கும் சென்று மலர் தூவி வணங்கினான். பின்னர் மேகவண்ணன் பெருமாள் கோவிலுக்கும் சென்று வழிபாடு செய்தான்.

எல்லா வேண்டுதலும் சங்கிலி மன்னனுக்குச் சாதகமாகவே அமைந்தன. மன்னன் சங்கிலி தளபதி இமையனார் குதிரையில் ஏறி படைகளின் முன்செல்ல, வேலேந்தும் வீரர்கள், வாள் வீரர்கள், பின்பு அணிவகுத்து குதிரையில் சென்றனர். வீரசங்கு ஒலியும், தாரைத் தம்பட்டைகளின் சத்தமும் வானை நோக்கி எழ, குதிரைகளின் குளம்பொலி பட்டு எழுந்த புழுதிகள் விண்ணிலெங்கும் மோதி பகலவனை மறைக்க, வீரர்கள் கொழும்புத் துறையை வந்தடைந்தார்கள். சங்கிலி மன்னனின் படைவரவு கண்டு பறங்கியர் பீரங்கிக் குண்டுகளைப் பொழிய ஆரம்பித்தனர். தமிழ் படை வீரர்கள் பலர் உயிர் தந்தோம் எம் மண்ணுக்கென்று வீழ்ந்தனர். வேல் வீரர்கள் சிறிது பின்வாங்கியபோதும் பின்னர் ஆவேசம் கொண்டவர்களாக பீரங்கிகளை இயக்கும் பறங்கியரை நோக்கி வேல்களை எறிந்து கடுமையாகத் தாக்கினர்.

வேல் வரும் விசையையும் அது தம்மைக் குறி வைத்து வருவதையும் கண்ட பீரங்கிப் படை வீரர்கள் தம்முயிர்களைக் காப்பதற்காக திக்குத் தெரியாமல் ஓடத் தொடங்கினர். வாள் வீரர்கள் தம் வாள்களால் அப்பறங்கியர் தலைகளை வெட்டி வீழ்த்தினர். எங்கும் இரத்த வெள்ளம். பறங்கியர் தலைவன் அஞ்சவில்லை. கப்பலில் இருந்த மேலதிக வீரர்களைத் தொடர்ந்து களம் இறக்கினான். துப்பாக்கிகளால் வேறு தாக்கும்படியும் கட்டளையிட்டான். பறங்கியர் மன்னன் சங்கிலியின் படையிலும் பலர் மாண்டனர். தொடர்ந்து ஒன்பது நாட்கள் போர் நடந்தது. யார் வென்றார்? யார் தோற்றார்? என அறிய முடியாதநிலையில் பெரும்போர் தீவிரமடைந்தது. பறங்கிப் படைகளின் பீரங்கிகளை நெருங்க முடியவில்லை. துப்பாக்கிகளை நீட்டியபடி ஓடிவரும் பறங்கியர் படைகளின் தலைகள் உருண்டன. மன்னன் சங்கிலியும் தளபதி இமயனாரும் வெவ்வேறு முனைகளிலிருந்து போர்த்துக்கேயப் படைகளை எதிர்த்துப் போராடினர். பறங்கிப் படைகள் சோர்ந்தன.

மேலும், தாக்குப் பிடிக்க முடியாது என்ற நிலைக்கு வந்தனர்.

நாற்புறமும் சங்கிலி மன்னனின் படைகள் போர் புரியும் பறங்கியர் படைக்கு உணவு கிடைக்க முடியாதவாறு வழிகளைத் தடை செய்தனர். பட்டினியைத் தாங்க முடியாத பறங்கிப் படைகள் அங்குமிங்குமாகத் தப்பி ஓடினர். எதிர்த்து நின்ற பறங்கியர்கள் சங்கிலி வீரர்களின் வாள்களுக்கும் வேல்களுக்கும் இரையாகினர். பறங்கிப் படையினர் அனைவரும் பின்வாங்கிச் செல்லவே காட்டில் அவர்களால் கட்டப்பட்ட பெருங் கோட்டையை சங்கிலியின் வீரர்கள் உடைத்து அழித்தனர். போர் தணிந்தது. சங்கிலி மன்னனின் படைகள் வெற்றிவாகை சூடின. கொழும்புத்துறையிலிருந்து புறப்பட்ட சங்கிலி மன்னனுக்கும் படைகளுக்கும் எங்கும் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. படையினர் மன்னன் சங்கிலியோடு அரியாலை, செம்மணி வழியாக நல்லூர் அரண்மனை வாயிலை வந்தடைந்தார்கள். வந்தவர்களை கோட்டை வாயிலில் வைத்து ஆரத்தி எடுத்து வாழ்த்தி மகிழ்ந்தனர் தமிழ் மாதர்கள். மலர்மாலை ஏந்தி வந்த முதியோர் மாலை சூட்டி மன்னனை வாழ்த்தினார்கள். மன்னன் அவர்களிடம் விடை பெற்று அரண்மனைக்குள் சென்றான்.

மன்னன் சங்கிலியின் வெற்றி கண்டு பலரும் மகிழ்ச்சியோடு இருந்தவேளை அரண்மனையில் இருந்த அமைச்சன் அப்பாமுதலியும் அவன் மருமகன் பரநிருபசிங்கனும் உள்ளம் பொருமினார்கள். அவர்களின் உள்ளத்தே வஞ்சம் நெருப்பாக எரிந்தது. ஊர்காவற்றுறையின் சிற்றரசன் காக்கை வன்னியன் சங்கிலி பிடிபட்டால் நாடு தனக்கே என்று எண்ணிய எண்ணம் நிறைவேறாததால் துடித்துப் போனான். அடிபட்ட பாம்பென இருந்த இவர்கள் மீண்டும் எழுந்து தம் வஞ்சக வேலைகளை ஆரம்பிக்க ஆயத்தமானார்கள். அவர்கள் பதவி ஆசையால் தம் இனத்தை மறந்தார்கள். தம் மொழியை மறந்தார்கள். தம் உறவுகளை மறந்தார்கள். சூழ்ச்சியே அவர்களின் சிந்தனை ஆனது. (தொடரும்)

**சங்கிலி மன்னனின் படைவரவு கண்டு பறங்கியர் பீரங்கிக் குண்டுகளைப் பொழிய ஆரம்பித்தனர். தமிழ் படை வீரர்கள் பலர் உயிர் தந்தோம் எம் மண்ணுக்கென்று வீழ்ந்தனர். வேல் வீரர்கள் சிறிது பின்வாங்கியபோதும் பின்னர் ஆவேசம் கொண்டவர்களாக பீரங்கிகளை இயக்கும் பறங்கியரை நோக்கி வேல்களை எறிந்து கடுமையாகத் தாக்கினர்**



## வரம் தந்தாள் அன்னை வீரமகாகாளி

# நவீன அச்சியந்திரத்தின் தந்தை



அச்சியந்திரத்தை முதன் முதல் நிறுவி நூல்களை அச்சிட்டும், வெளியிட்டும் அச்சுத்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர் வில்லியம் காக்ஸ்டன். இவரின் சரியான பிறந்த திகதியும் பெற்றோர் பற்றிய விபரங்களும் தெரியவில்லை. எனினும், இவர் 1415-1422 காலப்பகுதிகளில் பிறந்துள்ளதாகத் தெரிகிறது. ஆங்கிலேயரான இவர் வர்த்தகராகவும் ராஜதந்திரியாகவும் எழுத்தாளராகவும் அச்சகத்தாராகவும் பணிபுரிந்துள்ளார். வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த காக்ஸ்டன். பெல்ஜியம் நகரில் தங்கியிருந்த காலத்தில் பெல்ஜிய கோமகள் பர்கண்டியின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானார். கோமகள் பர்கண்டியின் தூண்டுதலால் பிரெஞ்ச் மொழி நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். அந்தக் காலத்தில் அச்சுக்கலை ஆரம்ப நிலையில் இருந்தது. காக்ஸ்டனுக்கு அச்சுத்துறையில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக, அச்சியந்திர அமைப்பை தமது முயற்சியால் சீர்திருத்தி தாம் மொழிபெயர்த்த நூல்களை அச்சிட்டார். 1476 ஆம் ஆண்டு காக்ஸ்டன் இங்கிலாந்துக்கு திரும்பி வந்து வெஸ்ட்மினிஸ்ட்டர் என்ற இடத்தில் நவீன சாதனங்களுடன்கூடிய அச்சியந்திரம் ஒன்றை அமைத்தார். பல நூல்களை எழுதி அவற்றை தமது அச்சகத்தில் அச்சிட்டார். அவருடைய இலக்கிய நடை பலராலும் பாராட்டப் பட்டது.

நவீன அச்சியந்திரத்தின் தந்தை என்று அழைக்கப்படும் காக்ஸ்டன் 1492 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லெப்டொப்' சுயமாகவே செயலிழப்பது ஏன்?

## இணையத்தளத்தை பார்வையிடுவோரின் விபரங்களை அறிதல்

*** குறிப்பிட்ட ஓர் இணையத்தளத்தைப் பார்வையிடும் பாவனையாளர்களின் எண்ணிக்கையை எவ்வாறு அறிவது?**

இதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள மென்பொருளைப் பயன்படுத்த வேண்டும். வர்த்தக ரீதியிலான மென்பொருள் மட்டுமல்ல, இன்டர்நெட் வழியாக இலவசமாக 'டவுன்லோட்' செய்யக்கூடிய மென்பொருட்களும் உள்ளன. 'வெப் டிரெஃபிக் சொஃப்ட்வெயார்ஸ்' என்றே இந்த மென்பொருளுக்கு பெயரிடப்பட்டுள்ளது. 'கூகுல்' இணைய சேவையில் இவ்வாறான டிரெஃபிக் சொஃப்ட்வெயாரை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். www.google.com/analytics/ என்ற இணைய முகவரிக்குள் பிரவேசித்து அதில் கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்கும்போது அதில் 'விசேட கோர்ட்' (Scripting Code) ஒன்று உருவாகும். அதனை தமது வெப்தளத்தின் <head> டெக்ஸ்ஸுக்குள் செலுத்துவதன் மூலம் தமது வெப்தளத்தைப் பார்வையிடுகின்ற நபர்களின் நாடு உட்பட, தொடர்ந்து அந்தவெப்தளத்தில் பிரவேசிக்கின்ற அனைவரதும் விபரங்களை அறியமுடியும். அதுமட்டுமன்றி, மற்றையவர்களின் வெப்தளத்தைப் பார்வையிடுகின்றவர்களின் விபரங்களை அறியக்கூடிய இணைய சேவைகளும் உள்ளன. www.-trafficestimate.com என்பதும் அவ்வாறான இணைய சேவைகளில் ஒன்றாகும்.






*** சில சந்தர்ப்பங்களில் 'லெப்டொப்' கணினியை இயக்கும் போது (ஒன்) சிறிது நேரத்தில் அது சுயமாகவே 'ஒஃப்' ஆகிவிடுவதுண்டு. இவ்வாறு ஏன் ஏற்படுகின்றது?**

எந்த சந்தர்ப்பத்தில் கணினி சுயமாகவே Restart ஆகின்றதென்பதை அறிந்துகொள்ள வேண்டும். கணினியை இயக்கிவிட்டு தொழிற்பாடுகளை ஆரம்பித்தவுடன் மாத்திரம் Restart ஆகின்றதென்றால் மென்பொருளில் வைரஸ் இருப்பதோ அல்லது வேறு மென்பொருட்களில் உள்ள கோளாறுகளே காரணமாகும்.

அவ்வாறு, அல்லாமல் 'பூட்' ஆகுவதற்கு முன்னதாகவோ அல்லது அதற்கு பின்னரோ எந்தவொரு வேளையிலும் Restart ஆகின்றதென்றால் 'புரொஸஸர்' வெப்பமடைந்திருப்பதே காரணமாக அமைந்திருக்கும். புரொஸஸர் வெப்பமாவதைத் தணிப்பதற்கு பொருத்தப்பட்டிருக்கும் விசிறி (ஃபேன்) செயலற்றுப் போயிருத்தல் அல்லது அதன் குளிர்ச்சிப்படுத்தும் செயற்றிறன் குறைந்து போயிருத்தல் ஆகிய காரணங்களினாலும் கணினி இயல்பாகவே ஒஃப் ஆகி விடுவதுண்டு. இதனை நிவர்த்தி செய்வதற்கான ஒரே வழி புரொஸஸரில் கூலிங் ஃபேனை (Cooling Fan) மாற்றி புதியதொன்றைப் பொருத்துவதாகும். அப்படி மாற்றிய பின்னரும் இதே கோளாறு தொடர்ந்தால் மென்பொருட்களிலோ அல்லது வேறு உதிரிப் பாகங்களிலோ கோளாறு இருப்பதாக கருதமுடியும்.

## 'சீடி இமேஜ் ஃபைல்'

*** சீடி இமேஜ் ஃபைல் (CD Image) என்று குறிப்பிடப்படுவது எதனை?**

சீடிக்களைப் பிரதி பண்ணும் போது அதிலுள்ள தரவுகள் ஹார்ட் டிஸ்க்கில் பதியப்படுவதே (write) முதலில் நடைபெறுகின்றது. அதன் பின்னரே, அவை சீடிக்குள் செலுத்தப்படுகின்றது. அதனையடுத்து ஹார்ட் டிஸ்க்கில் பதியப்பட்ட அந்தத் தரவுகள் இயல்பாகவே அழிக்கப்பட்டு விடுகின்றன.

இவ்வாறு, சீடியில் உள்ள தரவுகளானது ஹார்ட் டிஸ்கில் விசேட ஃபையிலாகவே (File) பதியப்படுகின்றன. மீண்டும் அந்த ஃபைலைப் பயன்படுத்தி பிரதான சீடியின் தரத்தை ஒத்த இன்னும் பல பிரதிகளைக் 'கொப்பி' செய்துகொள்ள முடியும். இவ்வாறான பல்வகை தரவுகளை ஒன்றாகக் கொண்டுள்ளதே 'சீடி இமேஜ்' என்று அழைக்கப்படுகின்றது. எனினும், இந்த 'ஃபைல்' ஹார்ட் டிஸ்க்கிலேயே இருக்குமாயின், அதிலுள்ள தரவுகளைப் பயன்படுத்த முடியாது. அவற்றை இன்னுமொரு இடத்திற்கு மாற்றி 'சேவ்' செய்ய வேண்டும். சீடி ரைட்டிங் மென்பொருள் மூலமாக, இந்த இமேஜ் ஃபைலை இன்னுமொரு சீடியில் பதிவு செய்து கொள்ள முடியும். இதுதான் 'பேர்ன்' செய்தல் எனப்படுகின்றது. எனவே, எந்தவொரு ஃபைலையும் அதிலுள்ள அனைத்துத் தரவுகளையும் எவ்வித குறைகளுமின்றி மற்றுமொரு சீடிக்குப் பதிவு செய்ய வேண்டுமாயின், அதனை, இமேஜ் ஃபைலாக ஹார்ட் டிஸ்க்கில் சேர்வ் செய்ய வேண்டும்.









இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, நொவெம்பர் மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 03, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org